Registered as a NewsPaper

- 8 MAR 2005

விலை ரூபா-8.00

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: 024-222 4247 (சி-11455)

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் –16 | திருவள்ளுவர் ஆண்டு– 2036 | மாசி–24 | 08–03–2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை 18

# உலகவங்கிப் பிரதிநிதி மீது ஜே.வி.பியினர் கடும் சீற்றம்

## எல்லையைத் தாண்டுவதாகக் கண்டனம்



(கொழும்பு)

**புலிகள் தொடர்பாகத் தமது நிலைப்பாடு குறித்தும், சுனாமியால் பாதிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு 600 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டமை தொடர்பாகவும் பேட்டி வழங்கிய உலக வங்கியின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் மீது ஜே.வி.பி அமைப்பு தனது கடும் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.**

கூட்டணி அரசின் பிரதான கட்சியான ஜே.வி.பி. உலகவங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட்டை இலங்கையிலிருந்து வெளியேற்றும்படி கேட்டுள்ளது. இது தொடர்பாக ஜே.வி.பி. வெளியிட்ட அறிக்கையில் உலகவங்கிப்பிரதிநிதி சுனாமி உதவியான ஆறு பில்லியன் ரூபாவை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வடக்குக் கிழக்கில் விடுதலைப்புலிகளுடன் ஆலோசனை செய்தே முகவர் ஸ்தாபனங்கள் செலவு செய்யவேண்டுமென செய்தித்தாள் ஒன்றிற்குத் தெரிவித்தார். ஜே.வி.பி சிறிலங்காவின் இறைமைக்குப் பங்கம் ஏற

12 ஆம் பக்கம் பார்க்க)

## நான் வழங்கிய செவ்வி திரிபுபடுத்தப்பட்டுள்ளது!

### பீற்றர் ஹரோல்ட்

உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றிற்கு வழங்கிய செவ்வி திரிபு படுத்தப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளதாக அவர் நேற்றுவிடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இவர் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொழும்பு ஆங்கில் வார இதழ் ஒன்றிற்கு செவ்வி வழங்கி இருந்தார். இது திரிபுபடுத்தப்பட்டு பிரசுரிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக நேற்று மாலை உலகவங்கியின் வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டார்

12 ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமம் அரசியல்துறை செயலகத்தினுள் அத்துமீறிப் புகுந்து படையினர் அட்டகாசம்

கொடிகாமம் அரசியல்துறை அலுவலகத்திற்குள் பொலிசார், மற்றும் இராணுவப் புலனாய்வுத்துறை யினர் அத்துமீறி உட்புகுந்து சோதனை என்ற பெயரில் அட்டூழியம் புரிந்ததால் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. அலுவலகத்தில் இருந்த பணியாளர்களின் எதிர்ப்பையும் மீறி, இருபதுக்கும் மேற்பட்ட பொலி சார் மற்றும் புலனாய்வுத்துறை அலுவலகத்தினைச் சுற்றியுள்ள வளவுகளில் இருந்து அலு வலகத்திற்குப் பிரவேசித்துள்ளதாகத் தெரியவருகிறது. பகல் 11.40 மணியளவில் திடீரென உட்புகுந்த பொலிசார் அலுவலகத்தின் கதவுகளைப் பலவந்தமாகத் திறந்தனர். அதனைத் தடுக்க முற்பட்ட அலுவலக உதவியாளரைத் தள்ளிவிட்டதுடன் அச்சுறுத்தல் விடப்பட்டதாகவும் தெரியவருகிறது.

சம்பவம் தெரியவந்ததும் சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்த தென்மராட்சிக் கோட்ட

12 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்த உடன்பாடு நெருக்குதலுக்குள்ளாகியுள்ளது


### போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசிற்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைமுறையில் இருக்கும் போர் நிறுத்த ஒப்பந்தம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கருத்துத் தெரிவிக்கையில்: கடந்த வாரம் இறுதியில் பத்துப் பேர் கொல்லப்பட்டமையை அடுத்து வன்முறைகள் மோசமடைந்து வருவதாகவும், இதனைத் தடுக்க இருதரப்பினரும் உதவவேண்டும் எனவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு கூறியுள்ளது.

## படகுக் கட்டுமான தொழிற்பயிற்சி நிலையம் கிளிநொச்சியில் திறந்து வைப்பு



படகுக் கட்டுமான தொழிற்பயிற்சி நிலையம் நேற்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடிப் படகுத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "மீண்டும் கடலைநோக்கி" எனும் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் டென்மார்க் கிளையினரின் நிதியுதவியில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்க ளுக்கான கல்வி, தொழிற்கல்வி

12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அகதிமுகாமிலிருந்து தாயகம் திரும்பிய பெண்மீது படகோட்டிகள் பாலியல் வன்முறை

(மன்னார்)

இந்தியாவிலிருந்து மீண்டும் இலங்கைக்குத் திரும்பிய இலங்கை தமிழ் அகதிகளில் இளம்பெண் ஒருவர் கடலில் உள்ள மண்திட்டி ஒன்றில் வைத்துப் படகோட்டிகள் சிலரால் பாலியல்வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தமிழ் அகதிகள் தலைமன்னாருக்கு அருகே உள்ள மணற்திட்டியில் இறக்கிவிடப்பட்ட நிலையில் இருந்தவேளை இனந்தெரியாத படகில் அவ்விடத்திற்கு வந்த மூவர் துப்பாக்கிகளையும், கத்திகளையும் காட்டி அந்தப் பெண்ணை வேறொரு மணற்திட்டிற்குக் கொண்டு சென்று பாலியல் வல்லுறவிற்குட்படுத்தியதுடன் தங்கநகைகள் மற்றும் ரொக்கப்பணத்தையும் கொள்

12 ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமை மாவிற்கு கட்டுப்பாட்டு விலை நீக்கம்

பிறிமா நிறுவனம் போதுமை மாவின் விலையினை உயர்த்தியதால் கோதுமைமாவிற்கான கட்டுப்பாட்டு விலை 2005.03.07 ஆம் நாள் நீக்கப்பட்டுள்ளதென நிதித்துறை விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி அறிவித்துள்ளது.

## அனைத்துலகப் பெண்கள் தினத்தில் பல்வேறு எழுச்சி நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

அனைத்துலகப் பெண்கள் தின நிகழ்வுகள் இன்று பல்வேறு பகுதிகளிலும் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட பெண்கள அமைப்பும், ஒக்ஸ்பாம் நிறுவனமும் இணைந்து கிளிநொச்சி கலாச்சார மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சட்டமும் பெண்களும் என்ற, போராளி தமிழ்க்கவியின் நிகழ்வும், மகளிர் கலைபண்பாடுக் கழகத்தினின் நாடகமும் மற்றும் பல கருத்துரைகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முல்லை மாவட்ட ரீதியாக .இன்று துணுக்காய்ப் பிரதேசத் தில் அனைத்துலகப் பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வுகள் மாலை 7.00 மணிக்கு மல்லாவி வண்ணன் விளையாட்டு மைதானத்தில் மிகவும் எழுச்சியாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புரை, கலை நிகழ்வுகள், விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவினரின் இசை

12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர்-சிவராசா (கணபதிப்பிள்ளை,சிவராசா விழிச்சிட்டி தெல்லிப்பழை, யாழ்ப்பாணம்., த.மு:- இல71, குமரபுரம் பரந்தன்)எனும் நாட்டுப்பற்றாளரே சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## வரிவிளம்பரம்

### பெயர் மாற்றம்

வட்டக்கச்சி சிவிச்சென்ரரில் வசிக்கும் தெள்ளுமணி இராஜேஸ்வரி ஆகிய நான் 08.03.2005 இன்றுமுதல் எனது பெயரை தெள்ளுமணி சுகந்தா என மாற்றம் செய்துள்ளேன் என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.
தகவல்:தெ.சுகந்தா. (சி.11549)

### விற்பனைக்குண்டு

சீமேந்துக்கல் விற்பனைக் குண்டு அளவு -12"x4"x6" விபரங்களை அன்புவாணிபத்தில் அறியலாம்.தொடர்புகளுக்கு. F.A அமலதாஸ்: அன்பு பல்பொருள் வாணிபம், அந்தோனியார் கோவிலடி, அளம்பில். (5492)


*-சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட-*

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உதவுதொகை, ஈருருளிகள் வழங்கல்

கடந்த 26.12.2004 அன்று நிகழ்ந்த சுனாமிப் பேரலை அனர்த்தம் காரணமாக உயிரிழந்த ஆசிரியர்களையும் அவர்களது தன்னலமற்ற சேவைகளையும் மீட்டுப்பார்த்து நினைவுகூரும் வகையிலும், அவர்களின்மறைவை யொட்டித் தினமும் துன்பப் படும் உறவினர்களுக்கு இயன்ற உதவிகளைச் செய்யவேண்டுமென்ற பெருவிருப்பிலும் மற்றுமொருசேவையாகக் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியக அனுசரணையுடனும், பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதி உதவியுடனும் வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம், வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்ட தமிழர்புனர்வாழ்வுக்கழக ஆதரவில் மட்டக்களப்பு மாவட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் இவ் உதவித்திட்டத்தினை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்தியுள்ளது.

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட கிராமங்களிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களில் சாவடைந்த ஆசிரியர்கள் ஆறு பேருக்கு உதவித் தொகையாக தலா பதினைந்தாயிரம் ரூபா வீதம் தொண்ணூறாயிரம் ரூபா உதவுதொகையும், தங்கள் வாழ்வாதாரங்களை முற்றாக இழந்த 54 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஈருருளிகள் வழங்குவதுமான நிகழ்வு கடந்த 04 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணியளவில் மட்டக்களப்பு கிரான்மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் நினைவுச் சுடர்களை விஷ்ணு ஆலய செயலாளர் சண்முகநாதன், காத்தான்குடி முன்பள்ளி கல்விமேம்பாட்டு நிலைய பிரதேச இணைப்பாளர் மசாயிரா, மற்றும் பட்டிருப்பு வலயத்தில் சாவடைந்த ஆசிரியர் குடும்பங்கள் சார்பில் சிவசங்கர் ஆகியோர் ஏற்றிவைத்தனர். இதனைத் தொடர்ந்து கொடியேற்றும் நிகழ்வு இடம்பெற்றது. தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் செ.பாண்டியன், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியினை மட்டக்களப்பு மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் செல்வி. ந. ஜெயவனிதா ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்டு உயிர்நீத்த ஆசிரியர்களின் நினைவுருவப் படங்களுக்கு சமாதான நீதவான் சிவநாதன், தமிழர் புனர்வாழ்வுக்கழக மருத்துவ சேவை இணைப்பாளர் சி.பரமேஸ்வரன், கிரான்கிழக்கு கிராம அபிவருத்திச சங்கத்லைவர் சௌந்த ரராஜா, சாவடைந்த ஆசிரியர் களின் குடும்ப உறவினர்களான குழந்தைவேல், தியாகராஜா, மகேஸ்வரன் ஆகியோரும், காத்தான்குடி பாலர் பாடசாலை ஆசிரியை பதுஷிகா அவர்களும் நினைவுச் சுடர்களை ஏற்றி வைத்தனர்.

நினைவுருவப் படங்களுக்கான மலர் மாலைகளை மட்டக்களப்பு கிரான் மகாவித்தியாலய அதிபர் அணிவித்ததைத் தொடர்ந்து அக வணக்கம் செலுத்தப்பட்டது. இதனையடுத்து வரவேற்புரையை கல்குடா'வலய முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் திருமதி மதனராஜ் கலைவாணியும் நினைவுரையை மட்டக்களப்பு வலய முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் திருமதி மைக்கல்சரோஜினி தேவியும் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து சுனாமிப் பேரலையினால் சாவடைந்த முன்பள்ளி ஆசிரியர்களான அ.வாசுகி பொ.லீலாவதி, ச.தீபசுபாளினி, ம.பிரபாளினி, மணிமெர்ழி, மலர்விழி ஆகியோரின் குடும்பஉறவினர்கள் தலா பதினைந்தாயிரம் ரூபா வீதம் உதவித் தொகையினைப் பெற்றுக் கொண்டனர். மேலும் முற்றாக வாழ்வாதார[illegible]களை இழந்த ஆசிரியர்களுக்குஈருருளிகள் வழங்கப்பட்டன.

# எமது மக்கள் தமது எதிர்ப்பைக்காட்ட நடத்தும் போராட்டங்கள் ராணுவ ரீதியாக ஒடுக்கப்படுகின்றன

## -தமிழீழ விளையாட்டுத்துறையினர் தெரிவிப்பு

எமது மக்கள் எதிர்ப்பை, அதிருப்தியை வெளிக்காட்டுவதற்காக மேற்கொள்ளும் சனநாயகப் போராட்டங்களைக் கூட படையினரும், பேரினவாதிகளும் இராணுவ ரீதியாக ஒடுக்கும் நடைமுறையே சமாதானத்தின் பெயரால் நடத்தப்படுகிறது என கேணல் கிட்டு நினைவாக எட்டு மாவட்டங்களை உள்ளடக்கி கிளிநொச்சியில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் முடிவில்நேற்றுத் தமிழீழ விளையாட்டுத் துறையினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சமாதான முயற்சி தொடர்பான செய்தியுடன் வரும்போதே கேணல் கிட்டு உட்பட (10) வீரவேங்கைகள் சதிமுயற்சியால் கொல்லப்பட்டனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் ஏற்பட்ட அந்தயுத்த நிறுத்த காலத்திலும் சமாதானத்துக்காக இதுவரை பல போராளிகள் தமது உயிரை ஈகம் செய்துள்ளனர். எமது மக்களின் கௌரவமான வாழ்விற்காக, ஆத்திரமூட்டப்பட்டபோதும் பொறுமையைக் கடைப்பிடித்தோம். இன்று எமது மக்கள் தமது எதிர்ப்பை, அதிருப்தியை வெளிக்காட்டுவதற்காக மேற்கொள்ளும் சனநாயகப் போராட்டங்களைக் கூட படையினரும், பேரினவாதிகளும் இராணுவ ரீதியாக ஒடுக்கும் நடைமுறையே சமாதானத்தின் பெயரால் நடத்தப்படுகிறது. உயர் பாதுகாப்பு வலயத்தால் இடம்பெயர்ந்த மக்கள் அகதிமுகாம் களிலும், கடல் வலயத்தால் பாதிக் கப்பட்ட மக்கள் தொழில் இன்றியும் வாழ்ந்து கொண்டி ருக்கும் சூழலில் குறைந்தபட்சம் வீதிகளிலாவது பாதுகாப்பாகச் சென்றுவர முடியாதளவு நிலை படையினரின் வாகனங்களால் ஏற்படுத்தப்படுகின்றது. மக்களின் உயிர்கள் பற்றிய அவர்களின் அலட்சியப் போக்குகாலம் காலமாகவே தொடர்ந்துவருகிறது.

சிங்களம் மட்டும் அரச கரும மொழியாக்கப்படும் போது இந்தத் தீவில் இரண்டு நாடுகள் உருவாகும் என சிங்களப் புத்திஜீவிகளே பாராளுமன்றில் குரல் கொடுத்தபோது அதனை எதிர்த்து காலி முகத் திடலில் சத்தியாக்கிரகம் இருந்த தமிழ்த் தலைவர்களின் தலைகள் உடைக்கப்பட்டன. இதன் தொடராக ஏற்பட்ட 1961ஆம் ஆண்டு சிங்கள சிறி எதிர்ப்பு அகிம்சைப் போராட்டத்தில்ஈடுபட்ட சத்தியாக்கிரகிகள் மீது யாழ்ப்பாணம் கச்சேரி முன்பாக இராணுவம் ஏவிவிடப்பட்டது.

புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைவு இந்தத் தேசத்தை பிரி வினைக்கு இட்டுச் செல்லும் ஆப்பு என ஜே.வி.பி.யினர், மற்றும் பேரினவாதிகள் கூச்சலிடுகின்றனர். இற்றைக்கு எண்பது வருடங்களுக்கு முன்பே 1926ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா இந்த நாட்டிற்கு சமஷ்டிஅரசியல் அமைப்பேபொருத்தமானது எனத் தெரிவித்ததோடு, மூன்று சமஷ்டிக் கூட்டமைப்பின் அரசாகவே மத்திய அரசு அமைய வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார். இந்த நாட்டில் எந்த சிங்களத் தலைவர்களையும் அறிவு பூர்வமாகசிந்திப்பதற்கும், செயலாற்றுவதற்கும் பேரினவாதம் அனுமதித்ததில்லை என்பதே இதுவரை வரலாறாக இருக்கின்றது. எனத்தெரிவிக்கப் பட்டுள்ளது.


முல்லை மாவட்டதேசிய எழுச்சிப் பேரவை

நல்ல பணிகள் ஆற்றி வருகின்ற

திரு.த.குருகுலராசா (வ.க.ப) அவர்களை வாழ்த்தி வழியனுப்பி

திரு. ப.அரியரத்தினம் (வ.க.ப) அவர்களை வருக வருகவென

----- வரவேற்று நிற்கின்றது -----



த.குருகுலராசா



ப.அரியரத்தினம்

ஏழாண்டு சேவைகள் ஆழமான நற் சேவை
வீழாது கல்வி உயர்ந்து விளைந்தது முல்லையில்
தூளாக எம்தேசம் போரில் துடிதுடித்த வேளையிலும்
தாழாது கல்வியைக் காத்த தமிழ் மன்னன் குருகுலம்.

எங்களின் பேரவைக்கு ஏற்றந் தந்த ஆலோசகர்
அங்கங் களைக்க அன்று தொட்டு சேவை செய்தார்.
பங்கமற்ற மொழிபெயர்ப்பு தங்கமான நடைநடை
எங்கு தான் சென்றாலும் பொங்கும் பெரும் புகழ்

முத்த பெரும் பழம் மூப்புடைய நல் நிர்வாகி
ஆர்த்த துன்பத்திலும் அடி பணியாத கல்விமான்
வார்த்தெடுத்த கல்விப் பழத்தை வருகவென அழைக்கிறோம்.
சீர் பொங்க முல்லை மண் சிரிப்புடன் அழைக்கிறது.

எம் மண்ணில் நீங்கி ஏற்றமுடன் வாழ்ந்திராது
இம் மண்ணில் இதயம் வைத்த இணையற்ற அரியமைய
மண்ணில் கல்வி வாழ மலைபோல் சேவை செய்தார்
அம்மனிதரையாம் அழைக்கின்றோம் வருகவென்று......

தேசிய எழுச்சிப்பேரவை,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி.11551)


# யாழ்.இல் பொது மக்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து கண்காணிப்புக்குழு அலுவலகம் முன் நேற்று ஆர்ப்பாட்டம்

**- படையினரின் யுத்த நிறுத்த மீறல்களை சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்தக் கோரிக்கை**

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது இராணுவம் மற்றும் பொலிசார் அப்பாவிப் பொதுமக்களையும், பாடசாலை மாணவர்களையும் குறிவைத்து மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களையும், யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் என்பவற்றின்மீது படையினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டமையையும் கண்டித்து. இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகம் முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.**




யாழ். மாவட்டக் கல்விச் சமூகத்தினரது ஏற்பாட்டில் இடம்பெற்ற இப் போராடடத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், யாழ் .தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர். கலந்து கொண்டனர்.

முன்னதாக யாழ். நல்லைக்கந்தன் ஆலயச் சூழலில் வந்து கூடிய மாணவர்கள் அங்கிருந்து கோவில் வீதி ஊடாக அவ் வீதியில் அமைந்துள்ள கண்காணிப்புக்குழுவின் அலுவலகம் நோக்கிப் பேரணியாக வந்து கண்காணிப்புக் குழுவின் அலுவலகம் முன்பாகக் கூடினர். அங்கு நின்று இராணுவத்தினருக்கு எதிரான கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர். இறுதியில் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட தலைவர் ரொணி பேர்சனிடம் தமது எதிர்ப்பினைத் தெரிவித்து மகஜர்களையும் கையளித்தனர்.

இது குறித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்காணிப்புக் குழுவிற்கு வழங்கிய மகஜரில் கடந்த வெள்ளிக்கிழமை வீதி விபத்தினைத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவமும், பொலிசாரும் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பல்கலைக்கழக மாணவ சமூகமாகிய நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், அவை யுத்த நிறுத்த மீறல்கள் எனவும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்டு மூன்று ஆண்டுகள் என்று வயதில் முதிர்ச்சியடைந்து போகின்றதே தவிர அதில் குறிப்பிட்டவாறு எந்த சரத்தும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. இவ்வாறு ஒழுங்காகப் போர் நிறுத்த ஒப்பந்த நடைமுறைகளை அமுல்படுத்தாமையே இங்கு இராணுவத்தின் பொறுப்பற்ற செயல்கள் நடைபெற வழிசமைத்துக் கொடுக்கின்றது.

உண்மையில், போர் நிறுத்த ஒப்பந்தத்தில் மக்களின் வாழ்விடங்களை விட்டு படையினர் வெளியேறி, மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிசமைக்க வேண்டும் என்று ஆழமாகக் குறிப்பிட்டுள்ள போதிலும், அது எந்தவிதமான நடைமுறைப்படுத்தலுக்கும் உட்படவில்லை என்பது வேதனையான விடயமாகும். மக்களுடைய பயன்பாடு கூடிய நெருக்கடிமிக்க இடங்களில் இராணுவ முகாம் மற்றும் காவலரண்கள் அமைத்து இருப்பதும், மக்களுடைய பொது வீதிகளில் படையினர் தமது வாகனங்களைக் கண்மூடித்தனமான வகையில் செலுத்துவதும் பொது மக்களின் வீதிப் பயன்பாட்டிற்கு மிகுந்த சிரமங்களை ஏற்படுத்தி வருகின்றன.

அன்று ஏற்பட்ட நிகழ்வு கூட சாதாரண வீதி விபத்தாக இருந்தால் கூட வீதிச் சட்டங்களை மீறி அதனை மூடிமறைக்க சிறிலங்கா இராணுவம் முயற்சித்தமையே மக்களைக் கொதிப்படைய வைத்தது.

இதன் விளைவாகவே இராணுவத்தினருக்கு எதிராக மக்கள் எதிர்ப்புப்போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலையைத் தோற்றுவித்தது.

ஆனால் அந்த மக்களுடைய எதிர்ப்புப் போராட்டங்களைக் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கைகள்தான் எம் மத்தியில் பெரும் விசனத்தினை ஏற்படுத்துகின்றது. போர் நிறுத்த காலத்தில் அப்பாவிப் பொதுமக்கள் மீதும், பல்கலைக்கழக மாணவர்கள் மீதும்,உயர்கல்வி மாணவர்களின் நலனை மேம்படுத்த உழைத்துக் கொண்டிருந்த சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் மீதும், பாராளுமன்ற உறுப்பினரான செ.கஜேந்திரன் அவர்களின் அலுவலகம் மீதும் இராணுவமும், பொலிசாரும் மேற்கொண்ட தாக்குதல் சம்பவமானது ஒரு யுத்தத்திறுத்த மீறலாகும்.

ஏனென்றால் யுத்தநிறுத்த காலத்தில் ஆயுதங்களைப் பயன்படுத்துவது தமிழர்களை யுத்தத்திற்கு வலிந்து,சீண்டி இழுக்கும் செயற்பாடாகவே அமையும்.

"இராணுவம் மக்களை அச்சுறுத்தும் விதத்தில் துப்பாக்கியுடனும், குண்டாந்தடிகளுடனும் மக்களைத் தாக்கிய நிகழ்வு போருக்குள் மக்களை இழுக்கும் செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம்".

எனவே இனி வரும் காலத்தில் இவ்வாறான யுத்த நிறுத்த மீறல்கள் இடம்பெறாமல் தடுப்பதுடன் இந்த அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலை யுத்த நிறுத்த மீறலாக சர்வதேசத்திற்கு தெரியப்படுத்த வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றோம். இதனூடாகவே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினை மேலும் நடைமுறைப்படுத்த முடியுமென எதிர்பார்க்கின் றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (41,33)

# யாழ்.குடா நாட்டில் நேற்று துக்கதினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவி நா.துளசிகா யாழ். நகரில் வைத்து இராணுவ உழவு இயந்திரத்தால் மோதிக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும்.

இதனைத்தொடர்ந்து குடாநாட்டில் இடம் பெற்ற மக்கள் போராட்டங்களை அடக்க இராணுவமும் பொலிசாரும் மேற் கொண்ட மிலேசத்தனமான நடவடிக்கைகளின் போது ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் பல்கலைக்கழகம், சர்வதேச தமிழீழ மாணவா பேரவை அலுவலகம் என்பன தாக்கப்பட்டமையையும் கண்டித்து நேற்று யாழ். குடாநாடெங் கிலும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இதன் போது வீதிகள்,சந்திகள், கடைகள் தோறும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு சோக கீதங்களும் ஒலிக்கவிடப்பட்டிருந்தன. அத்துடன் வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. மக்களும் கறுப்புப் பட்டியுடன் அன்றாட பணிகளில் ஈடுபட்டனர். இதைவிட யாழ். குடாநாட்டில் இயல்பு நிலைக்கு குந்தகம் ஏற்படாதவாறு இத்துக்க தினத்தை அனுஷ்டிக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க மக்கள் துக்கம் கடைப்பிடித்தனர்.இதற்கான அழைப்பினை தமிழ் தேசியக் கூட்டமைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (33)

# உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் போராட்டத்தில் இணைந்து கொள்வோம்

**-பெண்கள் பண்பாட்டு மையம் அழைப்பு**

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பெண்களாகிய நாம் மனிதப் பிறவிக்குரிய சகல உரிமைகளுடன் கூடிய தலை நிமிர்ந்த ஒரு வாழ்வை வாழ்வதற்கான விருப்பம் கொண்டுள்ளோம் அந்த வாழ்வை அடைவதற்காக உழைப்பதற்காக இறுகக் கரம் கோர்த்துள்ளோம் இன்றைய தினத்திலே பெண்கள் உரிமைக்காக உலகம் எங்கும் போராடும் சகல உறவுகளையும் இணைந்து கொள்ளுமாறு பெண்கள் பண்பாட்டுமையம் அழைப்பு விடுத்துள்ளது. பெண்களை அவர்களுடைய பிரச்சினைகளில் இருந்தும். அவர்கள் மீதான ஒடுக்குமுறைகளில் இருந்தும் விடுவித்து ஆளுமையுள்ளவர்களாக்கி எமது தேச நிர்மாணத்தில் பங்கெடுக்கக் கூடிய பெரும் ஆற்றல் மிக்கவர்களாக உருவாக்கும் செயற் பாட்டில் பெண்கள் பண்பாட்டு மையம் ஈடுபட்டு வருகின்றது. அந்த வகையில் சர்வதேச மகளிர் தினமான இன்று ஆத்தி சூடி வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் கிராமங்கள் தோறும் செயற்பட்டு வரும் பெண்கள் பண்பாட்டு மையத்தின் அனைத்து செயலாளிகளும் ஒன்று கூடும் நிகழ்வு இடம் பெறவுள்ளது. காலையில் ஒன்று கூடும் செயலாளிகள் நியாயமான தமது விருப்பப்படி தாம் செயற்படுவதிலுள்ள தடைகள் பற்றியும், தமது முழு ஆற்றலையும் வெளிப்படுத்தி தேச நிர்மாணத்தில் பங்கெடுப்பதிலுள்ள நெருக்கடிகள் பற்றியும் கலந்துரையாடுவர்.

–விரிவுரைகளைப் பகிஷ்கரித்து

# யாழ்.பல்கலை மருத்துவ பீட இறுயாண்டு மாணவர் போராட்டம்

(நல்லூர்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவப்பீட இறுதியாண்டு மாணவர்கள் நேற்றும் தமது விரிவுரைகளை பகிஷ்கரித்து பல்கலைக்கழக வளாக முன்றலில் சுலோக அட்டைகளைத் தாங்கி நின்றனர்.

சத்திரசிகிச்சைக்கான கல்வியைக் கற்பதற்கு வசதி செய்யப்படாததனையிட்டு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். *.இதேநேரம் எங்களுக்கு கற்கை நெறி தொடங்குது யார் கையில்; *.உபவேந்தரே எமது சத்திர சிகிச்சைக் கற்கைநெறியைத் தொடங்குவதற்கு ஆவன செய்க! *.யாழ். மருத்துவப்பீட மாணவர்களின் கல்வி நிலை என்ன போன்ற சுலோகங்களைத் தாங்கி நின்றனர்.




விரைவாக இதற்கான நல்லதொரு முடிவை பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொள்ளா விட்டால், தொடர்ந்து ஏனைய மருத்துவ பீட மாணவர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவார்கள் என மாணவ மன்றப்பிரதிநிதிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. (41)

# கலந்துரையாடல்


மா விநியோகம் சம்பந்தமாகவும், அதன் விலை தளம்பல் தொடர்பாகவும் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 3.00 மணியளவில் யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்க சமாசத்தில் நடைபெறவிருப்பதால், அனைத்து ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கேட்டுள்ளார். (சு)

# வவுனியா, முல்லை மாவட்டங்களின் பல பகுதிகளில்
# பொதுமக்களுக்கு காவல்துறையினர் விழிப்புணர்வூட்டல்

**தமிழீழ காவல்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் குற்றத்தடுப்பு நட வடிக்கைகளின் ஓரங்கமாக நேற்று முன்தினம் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் தமிழீழ காவல்துறையினருக்கும், பொதுமக்களுக்குமிடையிலான சந்திப்பு நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. இதில் முக்கிய விடயமாக உந்துருளி பாவனையின் அதிகரிப்பும், இதனால் ஏற்பட்டுவரும் விபத்துக்கள் பற்றியும், விபத்துக்களை தவிர்ப்பது தொடர்பில் ஒவ்வொரு தரப்பினரும் செயற்பட வேண்டிய வழிவகைகள் பற்றியும் ஆராயப்பட்டது.**

நேற்று முன்தினம் காலை பத்து மணியளவில் புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழ காவல்துறையின் நடுவப்பணியக கண்காணிப்பாளர் சி.மாதவன், புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் பிறையாளன், பாடசாலையின் அதிபர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். விபத்து தடுப்பு தொடர்பான கருத்துக்களை புதுக்குடியிருப்பு காவல்பணிமனைப் பொறுப்பாளர், பரிசோதகர் சு.கிரு பாகரனும், உப பரிசோதகர் சி.பிரதீப்குமாரும் வழங் கினார்கள்.

முல்லைத்தீவுப் பகுதியில் முல்லைத்தீவு மகா



வித்தியாலத்தில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழ காவல் துறையின் சீர்திருத்தப் பிரிவுப்பொறுப்பாளர் சொ.நரேன், முல்லை.மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன், கோட்டக்கல்வி அதிகாரி ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரைகளை வழங்கினார்கள். தமிழீழ வீதிப் போக்குவரத்துச் சட்டம் தொடர்பான விளக்கங்களை முல்லைத்தீவு காவல்பணிமனைப் பொறுப்பாளர் உப பரிசோதகர் இ.றோய்காந் வழங்கினார்.

முள்ளியவளைப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் குற்றப்புலனாய்வுப் பிரிவின் கண்காணிப்பாளர் தே.கானகன், பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் முல்லைவீரன் ஆகியோர் கலந்துகொண்டு மக்களுடன் கலந்துரையாடினர். வபத்து இல்லாத சாரத்தியம் என்ற தலைப்பில் முள்ளியவளை காவல்பணிமனைப் பொறுப்பாளர் உப பரிசோதகர் கெ.சிவலிங்கம் கருத்துரைகளை வழங்கினார்.

மல்லாவிப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் மல்லாவிப் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் புனிதன், தனியார் போக்கு வரத்துக் கழகத் தலைவர் மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். அரசியல்துறையின் பிரதேசப் பொறுப்பாளரின சிறப்புரையைத் தொடர்ந்து துணுக்காய் காவல் பணிமனைப் பொறுப்பாளர் பரிசோதகர் ப.அருள் ஜோதீஸ்வரன் நிகழ்வில் கலந்துகொண்ட உந்துருளி சாரதிகளுக்கான அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இக்கருத்தரங்குகள் நடைபெற்ற சமகாலத்தில் வவுனியா மாவட்டத்தின் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலும் கருத்தரங்குகள் நடைபெற்றது. வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலத்தில் நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் மாங்குளம் காவல்பணிமனைப் பொறுப்பாளர் உபபரிசோதகர் த.கமலசிறீஸ் கரன், குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் தி.பகீரதன் ஆகியோர்



கலந்து கொண்டு பொதுமக்களுடனான சந்திப்பை மேற்கொண்டனர். ஏ-9 வீதியில் கடந்த காலங்களில் வீதிவிபத்தினால் ஏற்பட்ட இழப்பு விபரங்கள் சுட்டிக் காட்டப்பட்டு விபத்துத் தடுப்புத் தொடர்பான கருத்துக்கள் வழங்கப்பட்டன.

வவுனியா வடக்கு, நெடுங்கேணிப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் நெடுங்கேணிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ஜெயானந்தன், குளவிசுட்டான் வித்தியாலய அதிபர் சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர். நெடுங்கேணி காவல்பணிமனைப்பொறுப்பாளர் உபபரிசோதகர் திரவியநாதன் விபத்துத்தடுப்புத் தொடர்பாகவும் உந்துருளி சாரதிகள் கடைப்பிடிக்க வேண்டிய வீதி ஒழுங்கு விதிகள் தொடர்பாகவும் கருத்துரைகளை வழங்கினார். இக்கலந்துரையாடலில் ஆயிரம் பேர் வரையிலான உந்துருளி பாவனை யாளர்கள் கலந்துகொண்டு பயனடைந்ததுடன் இப்படியான கலந்துரையாடல்களை அனைவரும் பயன்பெறும் வகையில் கிராம மட்டத்திலும் நடத்த வேண்டுமென தமிழீழ காவல்துறையினிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (24)

## இரைப்பை,குடல் நோய் சிகிச்சை

வெளிநாட்டில் இருந்து வருகைதரவிருக்கும் இரைப்பை குடல் நோயியல் நிபுணரான மூர்த்தி அவர்களால் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் இரைப்பை, குடல்களில் ஏற்படும் நோய்களிற்கு ஆலோசனையும், சிகிச்சைகளும் எதிர்வரும் ஒன்பதாம் திகதி முதல் பன்னிரெண்டாம் திகதி வரை காலை 8.00 மணி தொடக்கம் பி.பகல் 2.00 மணி வரை வழங்கப்படவுள்ளது. பயன்பெற விரும்புவோர் வெளி நோயாளர் பகுதியுடன் தொடர்பு கொள்ளவும்.

முற்கூட்டியே பதிவு செய்பவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதால் முற்கூட்டியே பதிவுசெய்வது விரும்பத்தக்கது என வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## அனைத்துலக பெண்கள் தினத்தில் கலாச்சார மண்டபத்தில் கருத்துரை

(அலுவலக செய்தியாளர்)

அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்திப்புனர்வாழ்வு நிறுவனத்தினரால் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதியுதவியுடன் இன்று கிளிநொச்சி கலாச்சார மண்டபத்தில் கருத் துரை நிகழ்வு ஒன்றை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வினை எழுச்சி பூர்வமாக கொண்டாடும் வகையில் பிரதேச ரீதியாக மாதர்சங்கக் குழு உறுப்பினர்களையும், கிராமமக்களையும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களையும் ஒன்று கூட்டி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இருந்து காலை 9.00 மணிக்கு ஊர்வலமாக அழைத்து வந்து கலாச்சார மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே இந்த எழுச்சி நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினர் வேண்டிக் கொள்கின்றனர். (கு)

-ஸ்கந்தபுரம் பொதுச்சந்தையில்-

## பொது மலசலகூடங்களை மக்கள் பயன்படுத்தத் தடை!

(கிளிநொச்சி)

ஸ்கந்தபுரம் அங்காடியில் பொது மக்களின் பாவனைக்கென அமைக்கப்பட்ட இரண்டு பொது மலசல கூடங்களும் தற்போது பயன்படுத்த முடியாதவாறு தடுத்து வேலி அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அங்காடி வணிகர்களினதும், அங்காடிக்கு வரும் பொது மக்களினதும் செயற்பாடுகளினால் இங்கு சுகாதார சீர் கேடுகள் காணப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் மீளவும் இப்பொது மலசல கூடங்களை மக்களின் பாவனைக்கு அளிக்க முன்வரவேண்டுமென சம்பந்தப்பட்டவர்களை பொது மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (15)

## நீர்வழங்கல் திட்டம் நேற்று திருக்கேதீஸ்வரத்தில் ஆரம்பம்

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் நீர்வழங்கல்திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் நீர்ப் என அழைக்கப்படும் வடக்குக் கிழக்கு அவசர புனர்வாழ்வு நிறுவனத்தினரால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது இந்த திட்டத்தை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஏ.எஸ்.குணசிங்கம் கலந்து கொண்டு திறந்துவைத்தார். சிறப்பு விருந்திரனராக மேலதிக செயலாளர் வடக்குக் கிழக்கு அவசர புனர்வாழ்வு நிறுவனத்தின் திருமலைப் பொறியியலாளர் எஸ்.மகாலிங்கம் தேசிய நீர்வழங்கல் அதிகாரசபைப் பொதுமுகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டு இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர் நிகழ்விற்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விசுவலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார். (18)

## உருத்திரபுரீச்சர ஆலயத்தில் இன்று சிவராத்திரி விழா

(அலுவலக செய்தியாளர்)

மகாசிவராத்திரி விழா இன்று சைவ ஆலயங்களில் வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி உருத்திரபுரீச்சர ஆலயத்தில் இன்று சாமப் பூசைகள்,சமயச் சொற்பொழிவுகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன.

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இன்று கிளிநொச்சியிலிருந்து உருத்திரபுரீச்சர ஆலயத்திற்கு விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (சோ)

## பூநகரி, பளை அரசினர் வைத்தியசாலைகளுக்கு யுனிசெப் வழங்கிய அம்பியுலன்ஸ்கள் தடுத்து வைப்பு!

~சிறிலங்கா சுகாதார அமைச்சின் திட்டமிட்ட நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பளை, பூநகரி மருத்துவமனைகளுக்கென யுனிசெப் நிறுவனத்தினால் இரண்டு நோயாளர் அம்பியுலன்ஸ் வண்டிகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பெற்ற பொழுதிலும், இதுவரை மேற்படி இரு நோயாளர் அம்பியுலன்ஸ் வண்டிகளும் இந்த இரு வைத்திய சாலைகளுக்கும் வந்து சேர வில்லையெனத் தெரிய வந்துள்ளது.

பூநகரி, பளை வைத்தியசாலைகளில் அம்பியுலன்ஸ் வண்டிகள் இல்லாமையின் காரணமாக அப்பகுதி நோயாளர்களை அவசர சிகிச்சையின் பொருட்டு வேறு வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென தெரிவிக்கப் பெற்றதனைத் தொடர்ந்து, கடந்த வருடம் யுனிசெப் நிறுவனத்தினரால் மேற்படி வைத்தியசாலைகளுக்கென வெளிநாட்டில் இருந்து இரு அம்பியுலன்ஸ் வண்டிகள் இறக்குமதி செய்யப்பெற்றுள்ள பொழுதிலும் இவ்விரு அம்பியு லன்ஸ் வண்டிகளும் கொழும்புத்துறைமுகத்தில் விடுவிக்கப்படாது வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான நடவடிக்கைகள் எதனையும் சுகாதார அமைச்சு இதுவரை மேற்கொண்டதாகத் தெரியவில்லையென கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவை பணிமனையினர் மற்றும் மாவட்ட வைத்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட பொழுது தெரிய வந்துள்ளது.

பல வருட காலமாக எவ்வித வசதிகளும் அற்ற நிலையில் பலத்த சிரமங்களுக்கு முகங்கொடுத்து இயங்கி வந்த மேற்படி வைத்தியசாலைகளுக்கு தற்போதைய சூழ்நிலையில் கூட வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனத்தினால் வழங்கப்பெற்ற அம்பியுலன்ஸ் வண்டிகளைக் கூட குறிப்பிட்ட வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையினை சுகாதார அமைச்சு மேற்கொள்ளாது அசமந்தப் போக்கினைக் கடைப்பிடித்து வருவதென்பது கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வைத்தியசாலை வட்டாரங்களுக்கு பெரும் கவலையினை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)



கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையால் வாகனங்கள் தரிப்பிடம் கிளிநொச்சி நகரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நிலையிலும் போக்குவரத்திற்கு இடையூறாக நகர வீதியொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பாரவூர்திகளை படத்தில் காண்க. (படம் சோதி)

# சமாதானப் பேச்சை பலஸ்தீனத்துடன் மீண்டும் ஆரம்பிக்க இஸ்ரேல் விருப்பம்

(டெல்அவிவ்)

இஸ்ரேலிய பலஸ்தீன சமாதான நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிப்பது பற்றிபரிசீலிப்பதற்கு இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் விருப்பம் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன ஆயுதக் குழுக்களை கைது செய்ய பலஸ்தீனப் பிரதமர் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளைப் பாராட்டிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை இஸ்ரேலிய பலஸ்தீன பாதுகாப்புத் தலைவர்கள் நேற்று முன்தினம் சந்தித்துள்ளனர்.

கடந்த மாதம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் இஸ்ரேலியர்கள் ஐந்து பேர் கொலை செய்யபப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும். இத் தாக்குதல் காரணமாக தேக்க நிலையை அடைந்துள்ள தொடர்புகளை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதே சந்திப்பின் முக்கிய நோக்கமாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.



உக்ரைன் கெய்வ்நகரில் உக்ரைனின் முன்னாள் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் யூரி கறவச் செங்கோவின் உருவப் படத்தைத் தாங்கியவாறு உக்ரைனியப் பொலிசார் நினைவு நிகழ்வுகளில் ஈடுபடுகின்றனர்.

## பாரவூர்தி ஓட்டுநர்கள் தென்னாபிரிக்காவில் வேலை நிறுத்தம்

(ஜோகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் நேற்று முன்தினம் பாரவூர்தி ஓட்டுநர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நாடு முழுவதும் சுமார் 30 ஆயிரம் ஓட்டுநர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். இதற்கிடையில் ஜோகனஸ் பேர்க் நகரில் ஓட்டுநர்கள் நடத்திய போராட்டத்தில் கலவரம் வெடித்தது. பொலிசாரை நோக்கிக் கற்களை வீசித்தாக்கினர். இதனால் பொலிசார் துப்பாக்கிச்சூடு நடத்தி வன்முறையாளர்களைக் கலைத்தனர்.

# ஐரோ. ஒன்றிய அரசியலமைப்புத் திட்டம் குறித்து பிரான்சில் பொது ஜன அபிப்பிராய வாக்கெடுப்பு

(பரிஸ்)

பிரான்ஸ் ஐரோப்பிய ஒன்றிய அரசியல் அமைப்புத் திட்டம் தொடர்பாக பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பை "மே" மாதம் இருபத்தொன்பதாம் திகதி நடத்தவுள்ளது என்று நேற்று சனாதிபதி ஜெக்ஸ்சிறாக் அறிவித்தார்.

இந்த அரசியல் அமைப்புத் திட்டம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் நீண்ட காலவாதத்திற்குப் பின் இணங்கியிருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவம் 15 இல் இருந்து 25 ஆகக் கடந்த மாதம் அங்கீகரிக்கப்பட்டதையடுத்து, அந்த அமைப்பை துரிதமாக செயற்பட வைக்கும் நோக்கோடு அரசியலமைப்புத் திட்டம் சீரமைக்கப்பட இருக்கின்றது.

இது குறித்து பொதுஜன வாக்கெடுப்பை நடத்தும் இரண்டாவது அங்கத்துவ நாடு பிரான்ஸ் ஆகும். இதையடுத்து நெதர்லாந்தில் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு யூன் மாதம் முதலாம் திகதி நடத்தப்படும். அரசியமைப்புத் திட்டம் தொடர்பான ஒப்பந்தம் அமுலுக்கு வருவதற்கு சகல அங்கத்துவ நாடுகளதும் அங்கீகாரம் அவசியம். இந்த ஆதரவு பிரான்சில் குறைவடைந்து வருவதால் அபிப்பிராய வாக் கெடுப்பை நேரகாலத்துடன் நடத்துவதற்கு சனாதிபதி தீர்மானித்துவிட்டார் எனத் தெரிகிறது.

## ஆப்கானில் பாராளுமன்றத்தேர்தல் செப்ரெம்பரில் நடைபெறலாம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பாராளுமன்றத்தேர்தல் வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறலாமெனத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த வருடம் யூன் மாதம் நடைபெற இருந்த இத்தேர்தல் கூட்டுப் படைகளுக்கெதிரான தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதால் பாதுகாப்பு நிலவரங்களைக் காரணம் காட்டி கடந்த ஒக்ரோபர் மாதத்திற்குப் பிற்போடப்பட்டது. தற்போது மீண்டும் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இத்தேர்தல் பிற் போடப்பட்டுள்ளது. ஆனாலும் வரும் செப்ரெம்பால் தேர்தலை நடத்துவது பற்றி இறுதிமுடிவு எடுக்கப்படவில்லை. பல்வேறு அமைப்புக்களும் வரும் செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலை நடத்துமாறு கோரிக்கைவிடுத்துள்ளன. இருப்பினும் சனாதிபதித்தேர்தல் கடந்த ஒக்ரோபர் மாதம் நடந்து முடிந்தது தெரிந்ததே.

# நோர்வே எண்ணெய்க்கப்பலில் பற்றிக்கொண்ட தீ அணைக்கப்பட்டது

(ஒஸ்லோ)

நோர்வே எண்ணெய்க் கப்பலில் பற்றிக்கொண்ட தீ அணைக்கப் பட்டுள்ளது.

நோர்வே கரையிலிருந்து பத்து கிலோமீற்றர் தூரத்தில் தரித்து நின்ற இந்த எண்ணெய்க்கப்பலின் இயந்திர அறையில் பிடித்த தீ ஏனைய பகுதிகளுக்கும் பரவி கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கையில் அதிலிருந்த இருபத்தெட்டு மாலுமிகளும் உலங்கு வானூர்தி மூலம் காப்பாற்றப் பட்டதோடு, தீயணைக்கும் படையினர் உடன் விரைந்து சென்று கப்பலில் கொழுந்து விட்டெரிந்த தீயை அணைத்துள்ளனர். இதன் மூலம் கப்பலின் தேவைக்கென வைக்கப்பட்டிருந்த 800 தொன் எரிபொருள் கடலில் கலப்பது தடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

விபத்திற்குள்ளான இக்கப் பலைச் சுற்றி மீட்புப்படையினரின் பல கப்பல்கள் நிற்கின்றன.

உலக அளவில் கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் சவுதியரேபியா, ரஷ்யா, ஆகிய நாடுகளுக்கு அடுத்ததாக மூன்றாவது இடத்தில் நோர்வே நாடு இடம் பெறுவது குறிப்பிடத் தக்கதாகும்.

# சம உரிமை கேட்டுப் பெண்கள் பேரணி

# துருக்கியப் பொலிசார் தடியடி

**-இடதுசாரி அமைப்புக்கள் கண்டனம்**

(ஸ்தான்புல்)

**துருக்கியின் தலைநகர் ஸ்தான்புல் நகரில் ஆண்களுக்குச் சமமாக தொழிற்சாலைகளில் வேலை செய்ய உரிமைகேட்டு நேற்று முன்தினம் பேரணி நடத்த முயன்ற பெண்களைப் பொலிசார் தடியடிப்பிரயோகம் மேற்கொண்டு கலைத்ததில் பலருக்குக் காயம் ஏற்பட்டது, 50 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.**

மகளிர் தினத்தையொட்டி துருக்கியின் இடதுசாரி அமைப்பைச் சேர்ந்த பெண்களே இவ்வாறு பேரணியினை நடத்த முயன்றனர். ஆனால் இதற்கு அனுமதியில்லை எனக்கூறி பொலிசார் அவர்களைக்கலைந்து போகும்படி கேட்டுக்கொண்டனர். அதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் மறுப்புத்தெரிவித்ததால் அவர்கள் மீது பொலிசார் தடியடிப் பிரயோகம் நடத்தினர். கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியும் நடவடிக்கைகளினை மேற் கொண்டனர். இதன்போதே பலர் காயமடைந்ததோடு ஐம்பதிற்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப் பட்டனர்.

துருக்கி அரசாங்கத்தின் இந்நடவடிக்கையைத் துருக்கிய இடதுசாரி அமைப்புக்கள் வன்மையாகக் கண்டித்துள்ளன.



அவுஸ்திரேலிய விமானப்படைக்குச் சொந்தமான விமானம்

# லண்டனில் தீவிரவாதிகள் நடமாட்டம் பொலிஸ் அதிகாரி எச்சரிக்கை

(லண்டன்)

லண்டனில் 100 இற்கும் மேற்பட்ட அல்-ஹைதா தீவிரவாதிகள் நடமாடி வருவதாக ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி எச்சரித்துள்ளார்.

லண்டன் பெருநகர பொலிஸ் தலைவராக இருந்த சர்ஜான் ஸ்டீவன்ஸ் பிரபல பத்திரிகை ஒன்றில் எழுதியிருப்பதாவது: தீவிரவாதிகள் தடுப்புச்சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டவர்களை விடுவிக்க நீதிபதிகள் கடந்த ஆண்டு உத்தரவிட்டது பைத்தியக்காரத்தனம். அமெரிக்க இரட்டைக் கோபுரம் தாக்கப்பட்ட பிறகு லண்டனில் தீவிரவாதிகளுக்கு எதிராகச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின்படி சந்தேகத்திற்கிடமான வெளிநாட்டவர்களை எந்தக் குற்றச்சாட்டுமின்றி வீட்டுக் காவலில் வைக்க முடியும். இதை நீதிபதிகள் நிராகரித்து விட்டனர். நாம் சந்தித்து வரும் பயங்கரவாதத்தின் கொடூரத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள்தான் இச்சட்டத்தை எதிர்த்து வருகின்றனர். ஓசாமா பின்லேடனிடம் பயிற்சி பெற்ற 100 இற்கும் மேற்பட்ட அல்-ஹைதா தீவிரவாதிகள் தற்போது லண்டன் தெருக்களில் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர். அவர்கள் தமக்கு எதிராகக் கடும் தாக்குதலை மேற்கொள்ளத் திட்டமிட்டு வருகின்றனர். இவ்வாறு ஸ்டீவன்ஸ் எச்சரித்துள்ளார்.



ஈராக்கில் அல்கமாவின் வெளிப்புறத்தில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வீடுகளில் தேடுதலை மேற்கொள்வதற்கு அமெரிக்கப்படையினர் வரிசையாகச் செல்வதை படங்களில் காணலாம்.



ஈராக்கில் பக்கூபாநகரிற்கு அண்மையாகத் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தொடர் தாக்குதலில் காயமடைந்த ஒருவரை வைத்திய சாலைக்கு காவிச்செல்வதை படத்தில் காணலாம்.

# முல்லையில் ஆழிப்பேரலைகள் நடத்திய கோரத்தாண்டவம்

**இடிபாடுகள் நிறைந்து உருக்குலைந்து போயிருந்த கடினமான பகுதிகளுக்குள் வாகனங்களைக் கொண்டு போய் மீட்பு நடவடிக்கை செய்ய முடியாமல் இருந்தது. அந்தப் பகுதிகளுக்கெல்லாம் எங்களுடைய உந்துருளிகள் போய் வந்தன. பற்றைக்குள்ளும் சிறுவர்களின் சடலங்கள் இருந்தன. அதைவிட ஒரு இளம்தாய் தனது பச்சிளம் பாலகனை இறுக அணைத்தபடி வெள்ளை நிற நுளம்பு வலைக்குள் சிக்குண்ட நிலையில் கண்மூடிக்கிடந்தாள். எங்கள் பணி சடலங்களை மீட்பது மட்டுமானதாக இருக்கவில்லை. சுனாமி பற்றிய எச்சரிக்கையை அந்தப் பகுதியில் நின்றவர்களுக்குப் பரப்புவதாகவும் இருந்ததென சுனாமியால் சிதைந்து உருக்குலைந்து போயிருந்த முல்லை.நகரின் இடிபாடுகளுக்குள் உந்துருளியில் சென்று பணியாற்றிய இம்ரான் பாண்டியன் படையணியின் அதிவேக உந்துருளிப் படைப்பிரிவின் போராளி வீடுதலை தனது அனுபவத்தைப் பகிந்து கொண்டார். அவர் பகிர்ந்தவை உங்களுக்காக...**

# பாலகனை இறுக அணைத்தபடி நுளம்புவலைக்குள் சிக்குண்டு கண்மூடிக் கிடந்தாள் அந்தத்தாய்

கடற் பெருக்கால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பகுதிக்கு மீட்பு நடவடிக்கை செய்வதற்காக வருமாறு எங்களுடைய படையணியின் சிறப்புத் தளபதி தகவல் அனுப்பியிருந்தார்.

அவரின் தகவலை அடுத்து முதற் கட்டமாக எங்களுடைய அதிவேக உந்துருளி அணியின் ஒரு பகுதியினருடன் பாதிக் கப்பட்ட இடத்துக்கு விரைந்து சென்றோம்.

நாங்கள் அங்கு போன உடனேயே கடற்படைச் சிறப்புத் தளபதி சூசை அண்ணா அந்தப் பகுதிகளின் நிலையை

கொண் டிருந்தன.

எந்தப் பகுதிக்கும் போகக் கூடிய மாதிரி இருக்கவில்லை. வீதிகள் இருந்த இடமே இல்லாமல் இருந்தது. எங்கும் கட்டட இடிபாடுகளும், மரங்கள் முறிந்தும், பிரண்டு போயும் கிடந்தன. மணல் நிறைந்து போய் இருந்தது.

இவற்றுக்குள்ளால் எல்லாம் எங்களு டைய உந்துருளிகள் போய்க் கொண் டிருந் தன.



ளவு வேதனையாக இருந்தது. இப்படி எங்கள் மீட்பு நடவடிக்கையின் முதல் நாள் பதினைந்துக்கும் அதிகமான

அன் றைய தினம் மாலை 6.00மணியுடன் எங்கள் பணி நிறைவடைந்துவிட்டது.

அடுத்த நாள் காலை மீண்டும் மீட்புக்காகப் புறப் பட்டு விட்டோம். சடலங்கள் எல்லாம் ஊதிப் பெருத்துப் போய் இருந்தன. சில உடல்களைத் தூக்கவே முடியாமல் இருந்தது. அந்தளவுக்கு மோசமாகப் பழுதடைந்து போய் விட்டது. இதனால் உடல்களைக் கண்டவுடன் அந்தத் தகவலை அனுப்பி விட்டு எரியூட்டுமாறு சொல்லப் பட்டது. அதனால் நாங்கள் காணுகின்ற உடல்களை உடனடி யாகவே எரித்து விட்டோம்.



இப்படியே இறால்குளம் நோக்கிப் போய்க்கொண்டிருக்க அலை கரை யில் ஏழுக்கும் அதிகமான உடல்கள் இருந்தன. அவற்றையும் எரித்துவிட்டு குளத்துக்குள் நின்ற படகில் ஏறி தடியால் வலித்து வலித்துப் போய்ப்பார்த்தோம். குளத்துக்குள்ளும் சடலங்கள் இருந்தன. நாங்கள் நான்கு சடலங்களை அதற்குள் இருந்து மீட்டெடுத்தோம்.

அவ் வாறு மீட்ட சடலங்களின் மூட்டுக்கள் எல்லாம் கழண்டு போய் இருந்தன. அதனால் அவற்றைத்தூக்க

எங்களுக்கு விளங்கப்படுத்தி எங்களது வேலைகள் எப்படி இருக்க வேணும் என்பது பற்றியும் விரிவாகக் கதைத்து வரைபடத்தைக் காண்பித்து அதன்படி எங்களுக்கான பகுதிகள் பிரித்துத் தரப் பட்டது.

சுனாமி அடித்த முதல்நாள் எங்களுக்கான மீட்பு வேலைகள் தரப்பட வில்லை. அதன் பின்னான நாட்களில் தான் நாங்கள் பணி யில் ஈடுபட்டோம்.

முதல் நாள் முழுவதும் அனைத்துப்பகுதி களிலும், மேல் எழுந்தவாரியாக மீட்புப் பணி நிறை வடைந்திருந்தது. அதன் பின்னர் சடலங்களைத்

## பகுதி-36


தேடிக்கண்டுபிடிக்கின்ற வேலைகள் தான் நடை பெற்றன.

பெருமளவான சடலங்களை அகற்றிக் கொண்டிருந்ததாலும் பல உடல்கள் தவற விடப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தன. அவ்வாறு தவறவிடப்பட்ட உடல் களைத் தேடிக் கண்டுபிடிப்பது எங்கள் பணியில் முக்கியம் வாய்ந்ததாக இருந்தது.

அது மட்டுமன்றி வாகனங்கள் கொண்டு செல்ல முடியாத இடிபாடுகள் நிறைந திருந்த பகுதிகளும் நீண்ட தூரமான பகுதிகளும் எங்களுக்குத் தரப்பட்டது. அந்தப் பகுதிகள் முழுவதும் சரியான முறையில் மீட்பு நடவடிக்கைக்குட்படுத்த வேண்டும். நடவடிக் கையின் போது இனங்காணப்படுகின்ற உடல்கள் பற்றிய தகவல்களை வழங்கி குறித்த இடத்தை அடையாளப்படுத்திவிட வேண்டும்.

அவ்வாறு அடையாளப்படுத்திய உடல்களை எடுத்துச் செல்வதற்காக தயார்படுத்தப்பட்ட அணிகள் அதனை அகற்றிக்

இப்படியே நாங்கள் ஒவ் வொரு பற்றைகளையும், இடிந்த கட்டடங் களையும் சல்லடை போட்டுத் தேடிக்கொண் டிருந்தோம்கட்டடங்களுக்குள்



சடலங்கள் இருந்ததைவிட பற்றைகளுக்குள்ளும், கஞ்சல்கள் அடைந்திருக்கின்ற இடங்களுக்குள்ளும் சடலங்கள் அடைந்து கிடந்தன.

பற்றைகள் பெரிதாக இருக்கவில்லை. ஆங்காங்கே சில பற்றைகள் தான் இருந்தன. அதற்குள் தட்டிப்பார்த்தால் குழந்தைப் பிள்ளைகளின் உடல்கள்தான் இருந்தன.

அன்பாக அரவணைத்து மகிழும் குழந்தைகள் ஒவ்வொரு பற்றைக்குள்ளும் அலங்கோலமான நிலையில் சடலமாய் இருந்து எடுக்கின்ற பொழுது எங்கள் மனங்களெல்லாம் மௌனமாய் இருந்தது. கண்கள் இரகசியமாய்க் கசிந்தன. அந்த

சடலங்களை மீட்டிருந்தோம். அதில் பத்து வரையான உடல்கள் சிறுவர்களினதும், கு ழ ந ் தை

களினதுமாக இருந்தன. சில பகுதிகளில் கடல் நீர் தேங்கி இருந்தது. அந்த நீருக்குள்ளாலும் எங்களது உந்துருளிகள் போய்க் கொண்டிருந்தன. சில வேளைகளில் சுனாமி மீண்டும் அடிக்கபோவதாகத் தகவல் வரும். அந்தத் தகவலை அனைவ ருக்கும் பரப்புவதும் எங்கள் பணியாக இருந்து. தொடர்புடன் நிற்பவர்களுக்குத் தகவல் சென்றடையும். அதைவிட பெருமளவான மக்கள் தங்கள் உறவுகளைத் தேடி அந்தப் பகுதி முழுவதுமே பரந்திருந்தார்கள். அவர்களுக்குக் கடல்வரப் போகிறது உடனடியாக இந்தப் பகுதியில் இருந்து வெளி யேறுங்கள் என்ற தக வலைச் சொல்பவர்க ளாகவும் நாங் கள் தான் இரு ந்தோம். இப் படியே

முடியாமல் இருந்தது. அந்தப்பகுதியில் இருந்த பாய் களை தண்ணீக்குள் போட்டு அதற்கு மேல் சடலத்தைக் கொண்டு வந்து பாயால் தூக்கி எடுத்துக் குளத்தின் அலைக் கரையில் போட்டு எரித்து விட்டோம். இப்படியாக முப்பதிற்கும் அதிகமான சடலங்களை எங்களது அதிவேக உந்துருளி அணி மீட்டிருந்தது

சம்பவம் நடந்த அன்றைய தினம் நாங்கள் முல்லைத்தீவுக்குப் போய் இருந்த பொழுது முல்லை நகரப்பகுதியில் இளந்தாய் ஒருவர் தனது பச்சிளம் பாலகனை இறுக அணைத்தபடி வெள்ளை நிற நுளம்புவலைக்குள் சிக்குண்டு போய் சடலமாய் கிடந்தார். நுளம்பு வலை முழுவதும் கஞ்சல் கள் செருகியபடி இருந்தது.

**அ.லோகீசன்**

அந்தப் பிள்ளை சில மாதங்களுக்கு முன்னர் தான் பிறந்திருக்க வேணும். அன்றைய காலைப்பொழுதில் குழந்தையுடன் நுளம்பு வலைக்குள் உறங்கிக கொண்டிருந்த சமயம் கடல் பெருக் கெடுத்து வந்து அவர்களை அப்படியே அடித்துக்கொண்டு வந்திருக்கவேணும். அந்தப் பயங்கரமான சம்ப வத்தைப் பார்த்தது எனக்குப் பெரும் அதிர்வைத் தந்தது. களமுனைகளில் எத்தனை ஆமிக்காறற்ற பொடிகளைக் கண்டிருப்பம். ஆனால் எங்கட மக்களின்ர சடலங்கள் ஒவ்வொன்றையும் பார்க்கின்ற பொழுது வேதனையாக இருந்தது. என தனது மீட்பு அனுபவத்தை கூறிமுடித்தார் அந்தப்போராளி.

அமைதியான கடலின் கொடுமையான அலைக்குள் சிக்குண்டு தமது உறவுகள், உடமைகள் அனைத்தையம் இழந்து தவித்த முல்லைத்தீவு மக்களின் நிலை பற்றயும், அந்தப்பகுதிகள் எப்படி இருந்தது என்பது பற்றியும், உயிர்தப்பிய மக்கள் முகாம்களில் எப்படிபாதுகாக்கப்பட்டனர் என்பன உள்ளிட்ட பல்வேறு விடயங்களை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் எங்களுடன் பகிர்ந்தது கொண்டார். அவர் பகிர்ந்தவை அடுத்த பகுதியில்

தொடரும்...



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

## நிலவுக்கும் ஒருநாள் ஓய்வுண்டு

**கில்கிறிஸ்ட்** என்றால் அதிரடிதான் ஆனா லும் கடந்த சில போட்டிகளில் இவர் தடு மாறியதை காண முடிந்தது. 4,0,18 என குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

இது ரசிகர்களுக்கு ஏமாற்றமாக இருந்தது. ஆனாலும் அவரது விக்கெட் காப்பு அபாரமானதாகவே இருந்தது.

இந்த நிலை யில் நியூசிலாந்துக்கு எதிரான நான் காவது போட்டி யில் பொண்டிங் காயத்தால் பங்கேற்காது



போக அணியை வழி நடத்திய கில்கிறிஸ்ட் இதற்கு பரிகாரமாக துடுப்பாட்டத்தில் தனது பழைய ஆட்டத்தை வெளிப்படுத்தி பரவசப்படுத்தினார். 8 நான்கு ஓட் டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 37 பந்து களில் 54 ஓட்டங்களை அள்ளி, இழந்த பெருமையை விரைவாக மீட்டார்.

பொண்டிங் இல்லாத நிலையில் அணித் தலைவர் பொறுப்பை ஏற்ற கில்கிறிஸ்ட் அணிக்கு மற்றுமொரு வெற்றியைத் தேடிக் கொடுத்தார். இது இவ்வாறிருக்க நியூசிலாந்துக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் அபாரமாக ஆடி 91 ஓட்டங்களைக் குவித்து சதம் பெறும் வாய்ப்பை இழந்தார் கில்கிறிஸ்ட். இதுவும் அவுஸ்திரேலியாவின் மிகப்பெரிய வெற்றிக்கு உறுதுணையானது.

கில்லி எனசெல்லமாக அழைக்கப்படும் கில்கிறிஸ்ட் மத்திய தர ஆட்டக்காரராகவே அணியில் அறிமுகமானவர். ஆனால் அவரின் ஆட்ட திறமை 20போட்டிகளில் ஆரம்ப ஆட்டக்காரர் அந்தஸ்துக்கு உயர்த்தியது.

அவுஸ்திரேலியாவின் முன்னாள் விக்கெட் காப்பாளர் இயன்ஹுலியின் ஓய்வுக்கு பின்னர் விக்கெட் காப்பாளர் பணியை கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். ஒரு நாள் போட்டியில் மார்க்வோவிற்கு (173) பின்னர் இரண்டாவது அதிகபட்ச ஓட்டங்களை (172) குவித்துள்ள அவுஸ்திரேலிய வீரர் என்ற பெருமையும் கில்கிறிஸ்டுக்கு உண்டு.

விளாசல் ஆட்டத்துக்கு பெயர் பெற்ற இவர் விரைவாக ஓட்டங்களை குவிக்கும் ஆற்றல் படைத்தவர்.

ஒரு நாள் போட்டிகளில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக வந்து விளாசும் கில்கிறிஸ்ட் டெஸ்ட்போட்டியில் ஆறாவது ஆட்டக்காரராக களமிறங்கி அதே பாணியிலான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்களை குவிப்பார்.

ஏற்கனவே அசைக்க முடியாத அணியாக திகழும் அவுஸ்திரேலியாவுக்கு கில்கிறிஸ்ட் கூடுதல் பலம்.

## சபதம் முடிப்பது யார்?

**வரலாற்று** முக்கியத்துவம் வாய்ந்த இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர் சர்ச்சைகள், எதிர்ப்புகளுக்கு மத்தியில் இன்று ஆரம்பமாகிறது.

கிரிக்கெட் உலகில் பரபரப்பு நிறைந்த கிரிக்கெட் தொடர் என்றால் அது இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடர் தான். இது காலம் காலமாக இரு அணிகளிலும் ரசிகர்களிலும் ஊறி விட்ட ஒன்று. இந்தத் தொடர் எப்போதுமே சிறப்பானதாக கடுமையானதாக பதற்றம் நிறைந்ததாக இருக்கும். இரு நாடுகளுக்கும் இடையி லான அரசியல் வரலாற்றுரீதியான பின்னணிகள் எதிர்பார்ப்புகளை மேலும் அதிகப்படுத்தும்.



கடைசியாக இந்தியாவுக்கு வருகை தந்த பாகிஸ்தான் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை ஒன்றுக்கு ஒன்று என்ற கணக்கில் சமன் செய்தது. எனினும் 15 வருடங்களின் பின்னர் அந் நாட்டுக்கு 2004 மார்ச்சில் விஜயம் செய்த இந்திய அணி, பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரை இரண்டுக்கு ஒன்று என்ற கணக்கிலும் ஒரு நாள் போட்டித் தொடரை மூன்றுக்கு இரண்டு என்ற கணக்கிலும் வென்று நாடு திரும்பியது. அந்த தோல்வியை நிவர்த்தி செய்ய பாகிஸ்தான் முழுக்கவனத்தையும் இந்த சுற்றுத் தொடரில் செலுத்தியுள்ளது தாம் அனுபவித்த தோல்வியை இந்தியா இம்முறை அனுபவிக்கும் என இன்சமாம் உல் ஹக் தெரிவித்துள்ளார்.

இதுவரை இரு நாடுகளுக்குமிடையில் நடைபெற்ற 50 டெஸ்ட் போட்டிகளில் பாகிஸ்தான் ஏழு போட்டியிலும் இந்தியா 10 போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளன.

ஒரு நாள் போட்டிகளில் பாகிஸ்தானின் கரம் ஓங்கியிருப்பதுடன் சயிட் அன்வர் இந்தியாவுக்கு எதிராகவே அதிகூடிய ஒரு நாள் ஓட்டங்கள் பெற்றவராகமிளிர்கிறார். அவர் பெற்ற ஓட்டங்கள் 2002 ஆகும். இந்தியாவின் சார்பில் சச்சின் 1740 ஓட்டங்களையும் டெஸ்ட் போட்டிகளில் பாகிஸ்தானின் மியன்டாட் 2228 ஓட்டங்களையும், இந்தியாவின் கவாஸ்கர் 2089 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

அதிக டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தியவராக கபில் தேவ் (99) காணப்படுகிறார். அடுத்ததாக பாகிஸ்தானின் இம்ரான் கான் 94 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ஒரு நாள் போட்டிகளில் கூடிய விக்கெட்டுக்களை வசிம் அக்ரம் (60) பெற்றுள்ளார்.

தற்போது விசேடம் என்ன வென்றால் போட்டிகளுக்கு முன்பே பந்து வீச்சாளர்கள் தமது இலக்கு பற்றி அறிவித்திருப்பதாகும். பாகிஸ்தானின் டெனிஸ் கனேரியா தான் இந்தியாவின் துடுப்பாட்ட வீரரான ராகுல் ராவிட் மீது கண்வைத்துள்ளதாக கூறியுள்ளார்.

தான் ராவிட்டை நன்கு மதிப் பதாகவும் அவர் சிறப்பான துடுப்பாட்ட வீரர் எனவும் அவரே இந்தியாவின் காவலரண் என்றும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அவருக்கு பந்து வீசுவது வேறு எந்த வீரருக்கும் வீசுவது போன்று சுலபமானதல்ல என்றும் தனது பிரதான இலக்கு அவர் தான் என்றும் தெரிவித்துள்ளார்.

சுழல் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமான இந்திய ஆடுகளங்களில் 20 முதல் 25 வரையான விக்கெட்டுக்களை சரிப்பது அவ்ரின் நோக்கம் என தெரிவித்துள்ளார்.

அதேபோன்று இந்தியாவின் வேகப் பந்து வீச்சாளர் சகிர்கானும் பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக் முன்னாள் உபதலைவர் யுகானா ஆகியோர் மீது இலக்கு வைத்திருப்பதாக தெரிவித்துள்ளார். ஆனால் இர்பான் பதான் (இந்தியா)எவ்வித இலக்கு பற்றியும் குறிப்பிடவில்லை. அது போன்றே அனில் கும்ளேயும் எதுவித இலக்கு பற்றியும் குறிப்பிட வில்லை. பாகிஸ்தானின் நவிட் உல் ஹசனும் தான் ராவிட் மீது கண் வைத் துள்ளதாக தெரிவிக்கிறார்.

அடுத்ததாக பின் வரிசை துடுப்பாட்ட வீரரும் சகலதுறை வீரருமான பாகிஸ்தானின் சயிட் அப்ரிடி பின்வரிசையில் வந்தாலும் சதமடிப்பதும் பந்து பார்வையாளர் பகுதிக்கு பறந்து செல்வதைகாண்பதும் தனது ஆசை எனக் குறிப்பிடுகிறார்.



கங்குலியும் தனது பங்கிற்கு பாகிஸ்தான் திறமை மிக்க அணி எனவும் அதனை வெல்வது மிகக் கடினம் எனவும் தெரிவித்துள்ளார். எது எவ்வாறெனினும் இன்று ஆரம்பமாகும் போட்டித் தொடரின் இலாப நட்டம் இன்னும் சில வாரங்களில் தெரிந்துவிடும்.

## மனம் மாறிய மனங்கள்

**கடந்த** வருடம் ஏப்ரலில் சிம்பாப்வே கிரிக்கெட் அணி வீரர்கள் அணியை விட்டு விலகுவதற்கு முன்பாக சிம்பாப்வே கிரிக்கெட்அணி ஏனைய அணிகளை அச்சுறுத்தும் அணியாகவே விளங்கியது. அப்போதைய அணித்தலைவர் ஹீத் ஸ்ரிக்கின் வீரர்கள் சர்வதேசப் போட்டிகளில் திறம்படவே ஆடினர். அணி தோல்வியை சந்தித்த போதும் எதிரணி போராடியே வெற்றி பெறவேண்டியிருந்தது.



1999 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டிகளில் இந்தியஅணியின் அரையிறுதிக்கான வாய்ப்பை முறியடித்தது. அது பிளவர் சகோதரர்களின் காலம் எனலாம். ஏனைய வீரர்களின் காலம் போன்று அவர்களும் சாதனை படைத்தனர். ஆயினும் அண்மைய ஒரு வருடகாலமாக சிம்பாப்வே கிரிக்கெட் அணி பல விமர்சனங்களுக்கும் வேதனைகளுக்கும் உள்ளானது அவ்வணியின் டெஸ்ட் அந்தஸ்து பறிக்கப்பட வேண்டும் என்றும் உள்ளூர் போட்டிகளில் மட்டுமே பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டது. இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போன்று பங்களாதேஷ் அணியுடன் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களை இழந்து நாடு திரும்பியது சிம்பாப்வே.

இறுதியாக வலுமிக்க தென்னாபிரிக்க அணியுடனான ஒருநாள் தொடரையும் இழந்ததுடன் போட்டிகளிலும் படுதோல்வியை சந்தித்து விட்டது. இந்நிலையில் தேசிய அணியில் இருந்து விலகிச் சென்ற வீரர்கள் அணியின் பரிதாபநிலையை கருத்தில் எடுப்பது போன்று மீண்டும் அணிக்கு திரும்ப விருப்பம் தெரிவித்து ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டுள்ளனர். அத்துடன் முன்னாள் அணித்தலைவா ஹீத் ஸ்ரிக் டடெண்டா தைபுவின் கீழ் விளையாடுவதற்கு சம்மதம் தெரிவித் துள்ளமை இவ் அணிக்கு ஆரோக்கியமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு மேலாக தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இணைந்த அன்டி பிளிக்னட் அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தமையும்சிம்பாப்வேக்கு எதிர்காலம் பிரகாசமானதாக அடைமயும் என எதிர்பார்க்கலாம்.

## 50 ஓவர்கள் சலிக்கிறதா?

**உலகின்** கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமான நாளிலிருந்து புதுப்புது மாற்றங்களையும் திருப்பு முனைகளையும் பெற்று வந்துள்ளது.

அதன் தொடர்ச்சியாக தற்போது 20 ஓவர்களைக்கொண்டதும் சிலமணித்தியாலங்களுக்குள் முடிவடையக் கூடியதுமான போட்டிகளை நடத்த உத்தேசிக் கப்பட்டு வருகிறது. இதன் பரீட்சார்த்தமாக அண்மையில் நியூசிலாந்து - அவுஸ்திரேலிய அணிகள் பங்கேற்ற போட்டியொன்று ஈடன் பார்க் மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.



இந்த இருபது ஓவர் போட்டிகளால் கிரிக்கெட்டின் சிறப்பு மேலோங்கும் என்பது அநேகமானோரின் கருத்தாகியுள்ளது. 50 ஓவர்களைக் கொண்ட ஒரு போட்டியை மட்டும் பார்த்து நாள் முழுவதும் அலுத்துப் போகும் ரசிகர்கள் 20 ஓவர்கள் கொண்ட ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளைப் பார்த்து ரசிக்க இதனால வழியேற்படுகின்றது.

அத்துடன் போட்டிகளை ஒளிபரப்பும் தொலைக்காட்சி சேவையும் இரண்டு முதல் மூன்று மடங்கு லாபம் ஈட்டுவர். ஒளிபரப்பும் உரிமையைப் பெற்றுக்கொள்ளும். போட்டித்தன்மையும் அதிகரிக்கும். கிரிக்கெட் சபையின் வருமானமும் அதிகரிப்பதுடன் வீரர்கள் பெறும் ஊதியமும் அதிகரிக்கும் இதனால் சூதாட்டக்காரர்களின் நடவடிக்கைகளும் ஒழிந்துவிடும் அல்லது கட்டுப்படுத்தப்படும். இதன் மூலம் இவ்வாறான நன்மைகள் கிடைப்பினும் பணக்கார நாடுகளின் விளையாட்டாகக் கருதப்படும் கிரிக்கெட் முடிவுறுவது எப்போது?. அண்மையில் சுனில் கவாஸ்கர் இந்தப் போட்டி தொடர்பாக விமர்சனம் செய்துள்ளார். கிரிக்கெட் போட்டிகள் காசுஅச்சடிக்கும் இயந்திரங்களாக மாறியது நிர்ணயிக்கப்பட்ட ஓவர் போட்டிகள் அறிமுகமான பின்னரே. எனவே மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளின் வரலாறு பற்றி நோக்குவது அவசியமானதாகும்.

1963ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகள் பங்கேற்ற கிலட் நிறுவனத்தின் அனுசரணையுடன் நொக்கவுட் முறையில் நடத்தப்பட்டதே இதன் ஆரம்பமாகும்.

எனினும் சர்வதேசத்தரப்போட்டி 1971 ஆம் ஆண்டிலேயே மெல்பேர்னில் நடைபெற்றது. இப்போட்டியும் டெஸ்ட் போட்டியாகவே ஆடப்பட்ட போதும் காலநிலை இடம கொடுக்காததால் அப்போதைய அதிகாரிகளான டொனால்ட்பிரட்மன், சிறல் ஹோகர் இடையே நடந்த கலந்தாலோசனையையடுத்து மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டியாக அனுமதிக்கப்பட்டது.

அதன் பின்னர் படிப்படியாக வளர்ச்சி பெற்ற கிரிக்கெட் ஒருநாள் போட்டியாகவும், டெஸ்ட் போட்டியாகவும் பிரிக்கப்பட்டது. பின்னர் 1997 இல் இரவுப் போட்டி (இந்தியா) அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் கைவிடப்பட்டது. பின்னர் பகலிரவு போட்டி அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது இவ்விளையாட்டு பலநாடுகளிலும் தீவிரமாக பரவி வருவதினால் எதிர் காலத்தில் 20 ஓவர்கள் போட்டிகளாவே ஒரு நாள் போட்டி நடைபெறுமோ என எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் தற்போது சீனா, கியூபா, அமெரிக்க நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் என பல நாடுகளும் கிரிக்கெட்டுக்கு முக்கியம் கொடுப்பதாகும். எனவே 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் 20 ஓவர் களைக் கொண்டதாக அமைந்தாலும் வியப்பில்லை.

# வன்முறையற்ற சூழலை ஊக்குவிக்க அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம்

## வவுனியா பிரதேச மகளிர் அபிவிருத்தி சமாசம் அழைப்பு

**பெண்களின், சிறுவர்களின் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் அதன் மூலம் வன்முறையற்ற சூழலை ஊக்குவிப்பதற்கும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம். இவ்வாறு வவுனியாப் பிரதேச மகளிர் அபிவிருத்தி சமாசம் அழைப்பு விடுத்துள்ளது.**

மார்ச் எட்டு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

1911 ஆம் ஆண்டிலிருந்து உலகப் பெண்களால் முன்னெடுக்கப்பட்டு வெற்றிகொள்ளப்பட்ட. போராட்டங்களின் வெற்றிநாளாக மார்ச் எட்டாம் திகதி பெண்கள் தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

நாட்டில் சமாதான காலத்தில் கொண்டாடப்படும் மூன்றாவது மகளிர்தினம் இதுவாகும். சமாதானம் என்ற சொல் பலர் மத்தியில் பேசப்படுகின்றதாக இருந்தாலும் கூட அதன் பெறுமதி எவ்வளவு காத்திரமானது, உண்மையானது என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. இந்நிலையில் பெண்களுக்கெதிராக வன்முறையும், சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகமும், விடுபடமுடியாத, தீர்க்க முடியாத பிரச்சினையாகவே தொடர்ந்து கொண்டிருக்கின்றது. பெண்களின் உரிமைகளையும் அவர்களது அன்றாட வாழ்வின் சுமைகளையும் கருத்தில் எடுத்து அதற்கான தீர்வொன்றினை எட்ட வேண்டிய கட்டாய கடமை அனைவருடையதாகின்றது.

சர்வதேச பெண்களிலிருந்து வேறுபட்டு தமிழ்ப் பெண்களாகிய நாம் பல தசாப்தங்களாக போரின் நெருக்கடிகளில் சிக்குண்டு எமது இயல்பு வாழ்க்கையை முற்றாக இழந்துள்ளோம். எமது பெண்கள் இராணுவ வன்முறைகளினாலும் எல்லைப்புற சிங்களக் குடியேற்றங்களாலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த காலங்களில் மிக மோசமான இடப்பெயர்வுகளாலும், இராணுவ நடவடிக்கைகளாலும் குடும்பத்தலைவர்களை இழந்து தவிக்கும் பெண்கள் அநேகம். இவர்கள் வாழ்ந்த பெரும்பகுதி நிலங்கள் இராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலயங்களாக்கப்பட்டு இவர்கள் வசதிகளற்ற இடங்களில் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர்.

சுனாமிப் பேரழிவு காரணமாகப் பாதிக்கப்பட்ட உறவுகளை இழந்த பெண்கள் இன்றுவரை எந்த நிவாரணங்களையும் பெறமுடியவில்லை. இவர்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாகவுள்ளது.

சமாதான முன்னெடுப்புகளுக்காக யுத்த முயற்சிகள் நிறுத்தப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்த போதும் இன்றுவரை எம்மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

வீட்டு வன்முறை உட்பட எல்லா வகையான வன்முறைகளையும குறைப்பதற்கு நாம் ஒன்றுபடுவோமாக.

பெண்ணின் எழுச்சிக்கு வித்திட்டு நிற்கும் இந்நாளில் பெண்களின் சுபீட்சமான வாழ்க்கைக்கும், அவர்களின் சுதந்திரத்திற்கும் இடையூறு செய்பவர்களைக் கண்டிப்பதுடன் எமது வேண்டுகோளை ஏற்று சர்வதேசம் எம் பெண்களின் முன்னேற்றத்திற்கு உதவ வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இப் பெண்கள் தினத்தில் தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம். இப்பெண்கள் தினத்தில் சர்வதேச பெண்கள் சமூகத்துடன் எமது கரங்களையும் இணைத்துக் கொள்கின்றோம்.

## ரூ.6990 மில்லியன் கிடைத்தது

ஆழிப்பேரலையைத் தொடர்ந்து சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் இம்மாதம் நான்காம் திகதி வரை 6990.60 மில்லியன் ரூபா சிறிலங்காவிற்கு கிடைந்துள்ளதாக சிறிலங்கா மத்திய வங்கி அறிவித்துள்ளது.மத்தியவங்கியும் ஏனைய அரச வர்த்தக வங்கிகளுக்கும் கிடைத்துள்ள 1227.48 மில்லியன் ரூபா அடங்கலாகவே இத்தொகை கிடைத்துள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

## டெங்கினால் பீடிக்கப்பட்ட நால்வர் கண்டுபிடிப்பு!

(திருமலை)

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நான்கு பேர் இனங்காணப்பட்டுள்ளனரென சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அண்ணல்நகர் பிரதேசத்தில் இருவருக்கும், மாலிந்துறையில் இருவருக்கும் டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மலத்தியன் புகையூட்டல் மூலம் நுளம்புகளை அழிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அப்பகுதிகளில் குடியேறியுள்ளோரை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு சுகாதாரப் பகுதியினரால் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

## படகுகள் திருத்தும் பணிக்கு பெண்களுக்கு பயிற்சி வழங்கல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் இருந்து 20 யுவதிகளைத் தெரிவு செய்து படகுகளைத்திருத்துவதற்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பாதிக்கப்பட்ட படகுகளை இலவசமாகத் திருத்தியமைக்கும் பணி கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப் பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சுனாமியின் பாதிப்பிற்குட்பட்ட மக்களிற்கு ஆரம்பத்தில் உணவு, உடை, தற்காலிக கொட்டகை போன்றவற்றை வழங்கி தற்போது அவர்களது சுயதொழில் வாய்ப்புக்கருதி இப்படகு திருத்தும் பணியை ஆரம்பித்துள்ளது.

## அநுராதபுரத்தில் 30, 000 ஏக்கரில் சோளம் பயிர் செய்ய ஏற்பாடு

அநுராதபுரம் மாவட்டத்தில் முப்பதாயிரம் ஏக்கரில் சோளம் செய்கை பண்ணப்படமுடிவு செய்யப்பட்டிருப்பதாக வடமத்திய மாகாண முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இப்பயிர்ச்செய்கையானது தொடர்ந்து ஐந்து வருட காலத்திற்கு நடைமுறைப்படுத்தப்படுவதோடு இப்பயிர்ச்செய்கை மூலம் வருடாந்தம் 100 மில்லியன் ரூபா மாகாண சபைக்கு இலாபமாகக் கிடைக்கும் எனவும எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். இம்மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் ஆயிரம் ஏக்கர் வீதம் தேர்ந்தெடுத்து சோளம் பயிரிடப்படவிருப்பதாகவும், இதன் மூலம் விவசாயிகள் மேலதிக வருமானமொன்றைப் பெற முடியுமெனவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது வருடமொன்றுக்கு 125000 மெட்ரிக்தொன் சோளம் தேவைப்படுகிறது இதில் 20,000 மெட்ரிக்தொன் சோளமே எமது நாட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்ய முடிந்துள்ளதாகவும், மிகுதி வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றது எனவும் அவர் கூறினார்.

இத்திட்டத்தின் மூலம் இம்மாவட்டத்தில் மட்டும் வருடாந்த உற்பத்தியாக 20,000 மெட்ரிக்தொன் சோளத்தை உற்பத்தி செய்ய முடியுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் பகுதிகளில் மகளிர் தினத்தை முன்னிட்டு கருத்தமர்வு

(புதுக்குடியிருப்பு)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பிலும், முல்லைத்தீவிலும் கருத்தூட்டல் நிகழ்வுகள் இடம் பெற்றன.

புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியில் அன்னையர் முன்னணி உறுப்பினரும், ஆனந்தபுரம் மாதர் சங்க கிராம அபிவிருத்தி சங்கத் தலைவியுமான றொபேட் ஜெனதா கோகுலமலர் தலைமையில் கடந்த நான்காம் திகதி இடம் பெற்ற நிகழ்வின் பொதுச்சுடரை புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கனகசுந்தரசுவாமி ஏற்றிவைக்க, தேசியக் கொடியை பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன் ஏற்றிவைத்தார். 2ஆம் லெப். மாலதியின் உருவப் படத்திற்கு ஈகைச் சுடரினை கோட்டக் கல்விப்பணிப்பாளர் பரமேஸ்வரன் ஏற்றிவைக்க, மலர்மாலையை ப.நோ.கூ.சங்க பிரதம லிகிதர் சிவரத்தினம் அணிவித்தார். வரவேற்புரையை அப்பகுதி பிரதேச மாதர்சங்கத் தலைவி திருமதி. மதியாபரன் நிகழ்த்த, சிறப்புரையை மகளிர் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி ஆற்றினார். தொடர்ந்து கருத்துரைகளை பிரமுகர்கள் நிகழ்த்தினர். அத்துடன் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது

மேலும் ஒட்டுசுட்டான் பிரதேச கற்சிலைமடு பாடசாலை மண்டபத்தில் நந்தினி தலைமையில் கடந்த நான்காம் திகதி இடம் பெற்ற நிகழ்வின் பொதுச்சுடரை முல்லை. மாவட்ட அரசியல்துறை நிதிப் பொறுப்பாளர் புகழரசன் ஏற்றி வைக்க, தேசியக்கொடியினை ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து 2 ஆம் லெப். மாலதியின் உருவப்படத்துக்கான ஈகைச்சுடரினை ஒட்டுசுட்டான் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப் பாளர் தயா ஏற்றிவைத் தார்.மலர் மாலையை முல்லை. மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் வதனி அணிவித்தார். கற்சிலைமடு பாடசாலை அதிபா, முல்லை.மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர், வலதுகரை அ.த.க பாடசாலை அதிபர் சிபாஸ்கரன் மற்றும் ஆசிரியா சுரேஸ்நாதன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. (08)

## தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கெதிராக இரத்தினபுரியில் இனவாதப் பிரச்சாரம்

(கொழும்பு)

பெரும்பான்மையின சிங்கள மக்களுக்குச் சொந்தமான காணிகள் கட்டடங்கள், சொத்துக்கள் எதனையும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எக்காரணம் கொண்டும் விற்பனை செய்யக் கூடாது என்ற தீவிரமான பிரச்சாரங்களை சிங்கள மக்களின் உடமைகள் மற்றும் உரிமைகள் பாதுகாக்கும் இயக்கம் இரத்தினபுரி மாவட்டத்தில் மேற் கொண்டுவருகின்றது.

இரகசியமான முறையில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப் பட்டு வந்த இந்தப் பிரச்சார நடவடிக்கைகள் தற்போது பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிவித்திகலை மற்றும் தேல நகரங் களில் சிங்களவர் களுக்குச் சொந்தமான கட்டடங் களில் இச் சுவ ரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இச்சுவரொட்டி களில் எம்பிலிப் பிட்டிய நகரம் முழுமையாக எமது கட்டுப்பாட்டில் உள்ளது அதே போல் நிவித்தி கலை, தேல நகரங்களையும், பௌத்த சிங்கள மக்களின் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வருவதுடன் ஏனைய நகரங்களையும் எமது கட்டுப் பாட்டுக்குக் கொண்டு வரவேண்டும். இதற்குச் சிங்கள மக்கள் உறுதுணை புரிய வேண்டும் அல்லது பின் விளைவுகளைச் சந்திக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இரத்தின புரி மாவட்டத்தில் நிவித்திகலை நகரத்திலேயே "வீரவிதான்" என்ற பௌத்த இயக்கம் தீவிரமாகச் செயற்பட்டு நாளடைவில் காணாமல் போய் விட்டது.

நிவித்திக்கலை நகரில் தமிழ், முஸ்லிம் மக்கள் தமக்குச் சொந்தமான முச்சக்கர வண்டிகளை நிறுத்தவோ, வாடகைச் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படுவதோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பலர் உரிய முறையில் இதற்கு விண்ணப்பித்த போதிலும் இதுவரை அனுமதிக்கப் படவில்லை. அத்துடன் தமது சொந்த முச்சக்கர வண்டிகளில் இந்நகரங்களுக்கு வருவதுமில்லை. இவ்வாறான நிலையில் கட்டடங்கள், சொத்துக்கள் என்பன தமிழ், முஸ்லிம் மக்களுக்கு விற்கக் கூடாது என்று பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சம்பவங்களுக்கு இப் பகுதி அரசியல்வாதிகளும் உறுதுணையாக இருப்பதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

## புத்த சாசன அமைச்சை ஹெல உறுமயவிற்கு வழங்க சனாதிபதி தீர்மானம்

(கொழும்பு)

புத்த சாசன அமைச்சை ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் உடுவே தம்மாலோக்க தேரரிடம் வழங்குவதற்கு சனாதிபதி தீர்மானம் மேற்கொண்டுள்ளார். புத்த சாசன அமைச்சு மற்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சு ஆகியன ரட்ணசிறி விக்கிரம நாயக்கவிடம் தற்போது இருந்து வருகின்றது. இது தொடர்பாக ஹெல உறுமயவின் தலைவரான உடுவே தம்மாலோக்க தேரர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவுடன் கலந்தாலோசித்துள்ளார். இதன் பின்னர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவும் தமது இவ் அமைச்சை இராஜினாமா செய்து ஹெல உறுமயவின் தலைவருக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து புத்த சாசன அமைச்சை உடுவே தம்மாலோக்க தேரரிடம் வழங்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்ததாகத் தெரிவிக் கப்படுகின்றது.


## உடன் தொடர்பு கொள்ளவும்

கொலண்டில் இருந்து வந்த வசந்தன் பருத்தித்துறையைச் சேர்ந்த த.பிரபா என்பவரை 10.03.2005ஆம் திகதிக்கு முன் சந்திக்குமாறு வேண்டுகின்றார்.

தகவல்
நந்தா

(5772)

# குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு பீகார் ஆளுநர் பரிந்துரை!

(புதுடில்லி)

பீகாரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமுல்படுத்துமாறு அம் மாநில ஆளுநர் பூட்டாசிங் பரிந்துரை செய்துள்ளார்.

இம் மாநிலத்தின் 12 ஆவது சட்டப் பேரவையின் ஆட்சிக் காலம் நேற்று முன்தினத்துடன் முடி வடைந்துள்ளதையடுத்து அதனைக் கலைத்து ஆளுநர் இப் பரிந்துரையை செய்துள்ளார். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 13 ஆவது சட்டப் பேரவைக்கான உறுப்பினர்கள் இன்னும் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளாத நிலையில் எந்தக் கட்சிக்கும் ஆட்சியமைக்க அறுதிப் பெரும்பான்மை இல்லாததால் இம் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமுல்படுத்துமாறு ஆளுநர் பரிந்துரை செய்துள்ளார்.

இப்பரிந்துரை குறித்து நேற்று ஆராய்ந்த மத்திய அமைச்சரவை பீகாரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமுல்படுத்த குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை எதையும் செய்யவில்லை.

மாற்று ஏற்பாடு செய்யப்படும் வரை ராப்திதேவி முதலமைச்சர் பதவியில் நீடிக்குமாறு ஆளுநர் ஏற்கனவே கேட்டுக் கொண்டிருப்பதனால் அவரே அப் பதவியில் நீடிக்க முடியும் என்றும் இம் மாதம் 31ஆம் திகதிக்குள் மாநில வரவு செலவுத் திட்டத்தை சட்ட மன்றத்தில் நிறைவேற்ற முடியாது விட்டால் குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ் பாராளுமன்றத்தில் அது நிறைவேற்றப்படலாம். என்று சட்டவல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை மாநில ஆளுநரின் பரிந்துரைப்படி குடியரசுத் தலைவரின் ஆட்சி அமுல் படுத்தப்பட்டால் பீகாரில் குடியரசுத் தலைவரின் ஆட்சி நடைபெறுவது எட்டாவது தடவையாக இருக்கும்.

இந் நிலையில் பீகாரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை பீகாரில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமுல்படுத்தப்படவுள்ள நிலையில் அங்கு தேவையான அதிகாரிகளை நியமிக்குமாறு பிரதமர் மன்மோகன் சிங்கிடம் பா.ஜ.கட்சி தலைவர் அத்வானி வலியுறுத்தியுள்ளார்.

நேற்று அத்வானி பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து பேசியுள்ளார். இதன் போது பீகாரில் கடந்த 15 ஆண்டுகளாக ராஷ்டிரீய ஜனதாதள ஆட்சி நடை பெற்று வந்ததால் அக்கட்சி ஆட்சி அதிகாரிகளே இப்போது முக்கிய பொறுப்புக்களில் இருக்கின்றனர். எனவே குடியரசுத் தலைவர் ஆட்சியிலும் அவர்களது ஆதிக்கம் தொடராதிருக்க நடுநிலைமையான அதிகாரிகளை முக்கிய பொறுப்புக்களில் நியமிக்க வேண்டுமென அத்வானி கோரியுள்ளார்.

# காவல்துறையினருடனான மோதலில் ஆந்திராவில் பத்து தீவிரவாதிகள் பலி!

## –ஆந்திர காவல்துறை அறிவிப்பு

(புதுடில்லி)

ஆந்திராவில் நிசாமாபாத் மாவட்டத்தில் காவல் துறையினருக்கும், நக்சலைட் தீவிரவாதிகளுக்கும் இடையில் நேற்று இடம் பெற்ற மோதலில் 10 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட தீவிரவாதிகளில் ஒருவர் ரமேஸ் என்ற மாவட்டப் பொறுப்பாளர் என்று ஆந்திர மாநில காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்தில் இருந்து ஒரு ஏ.கே 47 ரகத்துப்பாக்கி எஸ்.எல்.ஆர். ரகத்துப்பாக்கிகள் இரண்டு உட்பட பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக காவல் துறையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

-ஜார்க்கண்டில்-

# மேலும் இருசட்டப் பேரவை உறுப்பினர்கள் தே.ஜ.கூ.க்கு ஆதரவு வழங்க முன் வந்தனர்

(புதுடில்லி)

ஜார்கண்ட் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் அர்ஜுன் குந்தா மாநிலத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மேலும் இரண்டு சட்டப் பேரவை உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

81 உறுப்பினர்களைக் கொண்ட சட்டப் பேரவையில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு ஏற்கனவே 41 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ள நிலையிலேயே தற்போது மேலும் இரு சட்டப் பேரவை உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கப்பெற்றுள்ளது.


இதேவேளை தேசிய ஜனநாயகக் கூட்டணி நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்துவதற்காக ஆறு நாள் கூட்டத்தொடரை நடத்துவதற்கு அழைப்பு விடுத்துள்ளது. இதேவேளை ஜார்க்கண்டில் சுயேட்சையாகப் போட்டியிட்ட ஐந்து சட்டப் பேரவை உறுப்பினர்கள் கடத்தப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாநிலம் தழுவிய எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தப் போவதாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அறிவித்துள்ளது.

# பீகாரில் அரசியல் கட்சிகளிடையே புதிய கூட்டுக்கள் உருவாகும்?

(புதுடில்லி)

பீகாரில் குடியரசுத்தலைவர் ஆட்சியை அமுல்படுத்துமாறு ஆளுநர் விடுத்த பரிந்துரையையடுத்து அரசியல் கட்சிகளுக்கிடையே புதிய கூட்டுக்கள் உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

பீகாரில் ஐக்கிய ஜனதாதளம் பாரதியஜனதா தளம் கூட்டணியில் இருந்து வெளியேறினால் பா.ஜ.க. மற்றும் ராஷ்டிரிய ஜனதாகட்சி ஆதரவு இல்லாமல் ஆட்சியமைக்கலாம் என்று லோக் ஜனசக்தி கட்சித்தலைவர் ராம்விலாஸ் பஸ்வான் யோசனை தெரிவித்துள்ளார் நேற்று பாட்னாவில் செய்தியாளரிடம் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். முதலமைச்சர் பதவிக்கு சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஒரு தலைவரை. தெரிவு செய்ய வேண்டும். பாரதியஜனதாக் கூட்டணியிலிருந்து ஐக்கிய ஜனதாத் தளம் பிரிந்துவந்தால் அந்தக் கட்சிக்கு முதலமைச்சர் பதவியளிக்கத்தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ராம்விலாஸ் பஸ்வானின் இந்த புதிய தகவலையடுத்து பீகாரில் அரசியல் கட்சிகளுக்கிடையே புதிய அணிகள் உருவாவதற்கான சூழ்நிலைகள் எழுந்துள்ளது.



சென்னை நகைக் கடைகளில் திருடிய பாட்சாகனி, ஜகீர் உசேன், ரபீக்ராஜா ஆகியோரை காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

# மக்களின் பணத்தில் பிறந்தநாள் விளம்பரமா? இந்.உச்சநீதி மன்றம் விசாரணை

(புதுடில்லி)

மக்கள் வரிப்பணத்தில் பிறந்தநாள் விளம்பரம் செய்வது குறித்து மத்திய அமைச்சகங்களுக்கு இந்திய உச்சநீதிமன்றம் கட்டளை அனுப்பியுள் ளது.


இந்திய அரசியல்வாதிகள் அவர்களது பிறந்தநாளை ஆடம்பரமாகக்கொண்டாடி வருகின்றனர். மத்திய அமைச்சர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. மத்தியில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இந்த நிலை உள்ளது. இந்த நிலையில் மேற்படி பிரச்சினை குறித்து உச்ச நீதிமன்றில் ஒருவர் மனுத் தாக்கல் செய்தார். அந்த மனுவில் அவர் கூறியிருந்ததாவது;

அரசியல்வாதிகள் பிறந்தநாள் கொண்டாடும் போதெல்லாம் அதற்காக பெரிய அளவில் விளம்பரம் செய்கிறார்கள். இது போன்ற விளம்பரங்கள் இப்போது சர்வ சாதாரணமாகி விட்டன. தனிநபர்கள் மட்டுமன்றி மத்திய அமைச்சர்களும் கூட இப்படி பெரிய அளவில் விளம்பரம் செய்து பிறந்த நாள் கொண்டாடுகிறார்கள். மக்களின் வரிப்பணத்தில் இப்படி விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

நாளிதழ்களில் முழுப்பக்க விளம்பரம் செய்ய ஐந்து இலட்சம் வரை ஆகிறது. இது போன்ற பல விளம்பரங்கள் வருகின்றன. இதனால் மக்களின் வரிப்பணம் வீணாகிறது. எனவே உச்சநீதிமன்றம் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு நல்ல தீர்ப்பு வழங்கவேண்டும்.

மக்களின் வரிப்பணம் இந்த விஷயத்தில் வீணாவதை தடுக்க வேண்டும். இதுபோன்ற விளம்பரங்களுக்கு இதுவரை வீணாக்கிய பணத்தை மத்திய அமைச்சர்களிடம் இருந்து திரும்பப் பெற வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் அவர் கேட்டுள்ளார். இந்த மனுவை ஏற்ற உச்ச நீதிமன்றம் இது தொடர்பாக மத்திய அரசு மற்றும் பல்வேறு மத்திய அமைச்சகங்களுக்கு கட்டளை அனுப்ப உத்தர விட்டுள்ளது. இன்னும் 4 வாரத்தில் இதற்குப் பதில் அளிக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.



கணக்காய்வாளர் ராதாகிருஷ்ணன் தாக்கப்பட்ட வழக்கில் விஜயேந்திரரின் தம்பி ரகு மீண்டும் கைது செய்யப்பட்டார்.

## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்
07.07.1962

மறைவு
18.02.2004

திதி:-
08.03.2005

அமரர்
விநாயகமூர்த்தி
ரவீந்திரன்

சாரதி தமிழீழ போக்குவரத்துக்கழகம்
நுணாவில் கிழக்கு சாவகச்சேரி

ஆண்டொன்று போன போதும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
ஆயிரம் உறவுகள் இருந்தும் அப்பா
என்றழைக்க நீங்களில்லையே
சிவராத்திரி நன் நாளில் - எங்களை
விட்டுப்பிரிந்த எங்கள்-அன்புத்
தெய்வத்தை இனி நாம் - எங்கு
காண்போம்.

ஆறாத்துயரில் இருக்கும்
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

(சி.11550)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 03 1943

மறைவு 27 02 1995



அமரர் திரு.வயிரமுத்து அரியநாயகம்
(கோவில் வயல், இயக்கச்சி)

திதி.08.03.2005

என்றும் எங்கள் நெஞ்சில்
நீங்காத இடம் பெற்ற எங்கள்
ஒளி தீபமே இன்றும் எம்
நெஞ்சில் சுடர் வீடும் ஒளி
விளக்கே.

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(5776)

# 2005 கிட்டு ஞாபகார்த்த கால்பந்துப் போட்டி சம்பியனானது மன்னார் புனித சென்ஜோசப்



மன்னார் புனித சென்ஜோசப் அணி

தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப் படுத்திநடத்தப்பட்ட கேணல் கிட்டு ஞாபகார்த்த தேசிய உதைபந் தாட்ட சுற்றுப் போட்டியின் 2005ஆம் ஆண்டிற்கான வெற்றிக் கிண்ணத்தை மன்னார். மாவட்ட புனித சென்ஜோசப் அணி கைப்பற்றியது. போட்டியின் இறுதிநாள் போட்டிகள் நேற்றுக் காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் தேசியக் கொடி யேற்றலுடன் ஆரம்பமானது.

நேற்றைய அரை இறுதிப் போட்டியின் முதற்போட்டியில் யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐங்கன்றீஸ் அணியும், கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் லக்கிஸ்ரார் அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் போட்டி நிறைவடைய சில நிமிடங்களில் லக்கிஸ்ரார் அணி கோல் ஒன்றினை போட்டு 1-0 என்ற நிலையில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவானது

அடுத்த அரை இறுதிப் போட்டியில் திருகோணமலை பிக்பூட் அணியும், மன்னார். புனித சென்ஜோசப் அணியும் மோதின இப்போட்டியில் மன்னார் புனித சென்ஜோசப் அணி இரண்டு கோல்களையும், பிக்பூட் அணி ஒருகோலையும் போட்டு 2-1 என்ற கோல்கணக்கில் மன்னார் அணி வெற்றி பெற்று இறுதிப் போட் டிக்குத் தெரிவானது.

இதன் படி இறுதிப் போட்டிக்கு லக்கிஸ்ரார்,புனித ஜோசப் அணிகள் தகுதிபெற்றன. இப்போட்டியினை ஆரம்பிக்குமுகமாக வீரர்களை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம்,வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கிஷோர், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா,சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி சிறப்புத் தளபதி லெப்ரினன்ட் கேணல் நகுலன்,சாதனை வீரர் எதிர்வீரசிங்கம் ஆகியோர் வீரர்களை அறிமுகம் செய்துவைக்கப் போட்டி ஆரம்பமானது.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மன்னார் புனித ஜோசப் அணி 4-0 என்ற கோல் கணக்கில் லக்கிஸ்ரார் அணியைத் தோற்கடித்து வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

நேற்றைய போட்டிகளிற்கு பிரதம நடுவர்களாக சாண்டஸ், புவனேந்திரராஜா, கருணானந்தன் ஆகியோரும் பக்க நடுவர்களாக கதிர்காமநாதன் சாரங்கன் ஆகியோரும் கடமையாற்றினர்.

அணிவீரர்களுக்கு பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர். கிஷோர், வடகிழக்கு மாகாண உதை பந்தாட்ட சங்கத் தலைவர் தெய்வேந்திரன், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி கனகராசா மற்றும்பலரும் வழங்கிக் கௌரவித்தனர்.

சிறந்த கோல்காப்பாளராக வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணியினைச் சேர்ந்த கஜரூபனும் சிறந்த விளையாட்டு வீரராக



வட்டக்கச்சி லக்கிஸ்ரார்அணி

மன்னார் புனித ஜோசப் அணியை சேர்ந்த பீற்றர் ஜோன்சும் தெரிவு செய்யப்பட்டனர். (கு)

## கால்பந்து பிரபலம் மரடோனாவுக்கு எடைகுறைப்பு சத்திரசிகிச்சை



முன்னாள் கால்பந்து பிரபலம் மரடோனாவுக்கு எடை குறைப்புக்கான சத்திரசிகிச்சை நடைபெற்றுள்ளது. ஆர் ஜென்டினா அணியின் நம்பிக்கை நட்சத் திரமாக விளங்கியவர் மரடோனா. 1986 இல் அணிக்கு உலக கோப்பையை பெற்று தந்த பெருமைமிக்க இவர், போதை மருந்துக்கு அடிமையானார். இதன் காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டார். மரணத்தின் பிடியிலிருந்து அடிக்கடி தப்பிய இவருக்கு எடைதான் பெரும் பிரச்சினையாக உள்ளது. 44 வயதான மரடோனா 120 கி.கி எடையுள்ளார். இதனை குறைக்கும் படி டாக்டர்கள் கண்டிப்புடன் கூற கொலம்பியாவில் உள்ள மருத்துவமனையில் சிறப்பு சத்திரசிகிச்சை நடத் தப்பட்டது.

இவரது வயிற்றுப் பகுதியில் 'கேஸ் டிக்பை பாஸ்' சத்திரசிகிச்சை நடத்தப் பட்டது. இந்த சிகிச்சைக்குப்பின் இவரது எடை பெருமளவில் குறைய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

# பாகிஸ்தானை எதிர்கொள்ள இந்திய வீரர்கள் தயார் நிலையில்



கங்குலி

கடந்த மூன்று முறை, 1999 இல் இந்தியா வந்த வாசிம் அக்ரம் தலைமையிலான பாகிஸ்தான் அணிக்கும் தற்போதுள்ள இன்சமாம் தலைமையிலான அணிக்கும் நிறைய வித்தியாசம் காணப் படுகிறது என இந்திய அணித்தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், அப்போதைய அணியில் அனுபவம் வாய்ந்த வீரர்கள் மட்டுமே இருந்தனர். துடுப்பாட்டம் பந்துவீச்சு என இரண்டிலும் பாகிஸ்தான் அணி அதிக பலத்துடன் காணப்பட்டது. ஆனால் இப்போது வந்துள்ள அணியில் அனுபவம் வாய்ந்த வீரர்கள் ஒரு சிலரே உள்ளனர். நிறைய வீரர்கள் 20டெஸ்ட் போட்டிக்கும் குறைவாகத்தான் விளையாடி இருக்கிறார்கள், பந்து வீச்சில் முகமதுசமி, அப்துல் ரசாக் இருவரை மட்டுமே அணி நம்பியுள்ளது. அக்தர் இல்லாதது பாகிஸ்தானுக்கு மிகவும் பின்னடைவு. ஆனால், இளம் வீரர்கள் என்ற போதிலும் திறமை வாய்ந்தவர்களாக காணப்படுகின்றனர். இதனால் இவர்களை குறைத்து மதிப்பிடமாட்டோம்.

நமது அணியை பொறுத்த வரையில் கடந்த முறையைக் காட்டிலும் இப்போது அதிக வலுவுடன் உள்ளது. சச்சின், பாலாஜி, பதான் ஆகியோர் காயம். குணமாகி மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளனர். சமீபத்தில் நடந்த துலீப் சம்பியன் தொடர் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. இதில் அனைத்து வீரர்களும் விளையாடி நல்ல பயிற்சி பெற்றுள்ளோம். முக்கியமான தொடரை எதிர்கொள்ள இவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்றார்




# இந்தியாவை வெற்றிகொள்வதை சாதனையாக நினைக்கவில்லை



"இந்தியாவை வெல்வதை பெரிய சாதனையாக நாங்கள் நினைக்கவில்லை," என்கிறார் பதவி பறிக்கப்பட்ட பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் துணைத் தலைவர்யூசுப் யுஹானா.


இந்தியா,பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் கிரிக்கெட் டெஸ்ட்,மொகாலியில், இன்று தொடங்குகிறது. இரு அணிகளும் நேற்று முன்தினம் மொகாலி மைதானத்தில் கடும் பயிற்சி மேற்கொண்டன. பயிற்சி இடைவெளியில்,பாகிஸ்தான் அணியின் முன்னாள் துணைத்தலைவர் யூசுப் யுஹானாஅளித்த பேட்டியில் இந்தத் தொடரை மிகவும் பரபரப்பாக அனைவரும் எதிர்பார்க்கின்றனர். ஆனால், நான் அப்படி நினைக்கவில்லை. இந்தியாவை வீழ்த்தவது ஒன்றும் பெரிய சாதனை இல்லை. அவுஸ்திரேலியாவை வெற்றி கொள்வது மட்டுமே என்னைப்பொறுத்தவரை சாதனை. கார ணம்,அவுஸ்திரேலியா உலகச் சாம்பியன். இன்றைய திகதியில், அந்த அணிதான் பெஸ்ட், அவர்களை யாராலும் அவ்வளவு சுலபமாக வீழ்த்த முடியவில்லை. ஆகவே, அந்த அணியை வீழ்த்துவது மட்டுமே சாதனையாக இருக்க முடியும். இந்தத் தொடரில் இந்தியா அனுபவம் வாய்ந்த பலமான அணியாக களமிறங்குகிறது. எங்கள் அணியில் நான்,தலைவர் இன்சமாம் தவிர மற்றவர்கள் அனுபவம் இல்லாத இளைஞர்களே. கடந்த காலங்களில், அதாவது 1990 களில் எங்கள் அணி பலமானதாக இருந்தது. அப்போது நாங்கள் இந்தியாவுடன் விளையாட விரும்பினோம். என்ன காரணத்தாலோ, அப்போது எங்களுடன் விளையாட இந்தியா மறுத்துவிட்டது. இப்போது நாங்கள் சற்றுப் பலவீனமாக இருக்கிறோம். ஆனாலும், எங்கள் போராட்டம் எந்த விதத்திலும் குறையாது. கடுமையான சவாலை இந்தத் தொடரில் இந்திய வீரர்கள் எங்களிடம் இருந்து எதிர்பார்க்கலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார் யுஹானா.




இஸ்தான்புல் நகரி[illegible] நடந்த துருக்கி சூப்பர் லீக் கால்பந்து தொடரில் கலாட்சஸ்சரே, பெசி[illegible] அணிகள் மோதின. இப்போட்டியில் கலாட்சஸ்சரே 1–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதில் கலாட்சஸ்சரே அணியின் சியன் ஓாஸ்போலாட்லி, பெசிக்டஸ் அணியின் துமர் மெடின் (வலது) இருவரும் பந்தை [illegible] செல்லத்தான் இவ்வடி போராடுகிறார்கள்.

## முன்னாள் தலைவர் காலமானார்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவரும் லிவர் பூல் மாநிலத்தின் ஆயருமான டேவிட் ஷெப்பேர்ட் புற்று நோயால் காலமானார். 75 வயதான இவர் பிரபுக்கள் சபையின் உறுப்பினருமாவார்.ஷெப்பேர்ட் 1950 முதல் 1963 வரை கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்றார் 1963ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கெதிரான இரு டெஸ்ட் போட்டிகளுக்கு தலைமை தாங்கினார்.வலது கைதுடுப்பாட்ட வீரரான இவர் 1955 ஆம் ஆண்டில் சரே மாகாண அணிக்காக ஆடினார் 1969ஆம் ஆண்டு ஆயராக பதவியேற்றார்.



இந்திய, பாகிஸ்தான் அணிகள் மோதும் முதல் கிரிக்கெட் டெஸ்ட் மொகாலியில் இன்று தொடங்குகிறது. இதற்காக பாகிஸ்தான் வீரர்கள் நேற்று, பயிற்சியாளர் பொப் உல்மர் மேற்பார்வையில் தீவிர பயிற்சியின்பின் ஓய்வெடுக்கின்றனர்.



## சிந்தனைக்கு

எதிரியை விட துரோகிகளே ஆபத்தானவர்கள்

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 08-03-2005



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## தீர்க்கமான முடிவுகள்!

தமிழ்மக்கள் கொல்லப்படுவதையும், எமது போராளிகள் கொல்லப்படுவதையும் தலைவர் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார். நிச்சயமாக எமது தலைமைப்பீடம் மிக விரைவில் இதற்கொரு தீர்க்கமான முடிவை எடுக்கின்ற சூழலை நோக்கி நெருக்கமாக வந்து கொண்டிருப்பதாக நான் நினைக்கின்றேன் என்று அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தமை இன்றைய இராணுவ அரசியல் யதார்த்தத்தின் வெளிப்பாடு என்றால் மிகையாக மாட்டாது.

சிறிலங்கா அரசின் நடவடிக்கைகள், யுத்த நிறுத்த மீறல்கள் என்பன குறித்து சுனாமிக்கு முன்னதாகக் கடந்த ஆண்டு நவம்பர் மாத மாவீரர் நாள் உரையில் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களினால் தெளிவாகவே சுட்டிக்காட்டப்பட்டது. இதேவேளை தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்ந்தும் பாதிக்கப்படும் பட்சத்தில் சுதந்திரத்திற்கான போராட்டத்தை தமிழ்மக்கள் மீண்டும் தொடங்க வேண்டியநிலை உருவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் சுனாமியின் தாக்கமானது அரசியலில் ஒரு பெரும் திருப்பு முனையை ஏற்படுத்தியிருந்தது. அரசியல் முரண்பாடுகள் என்பதை மறந்து பாதிப்பிற்குள்ளான மக்களுக்கு உதவிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் எழுந்தது. இதன் காரணமாக சிறிலங்கா அரசிற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான உறவில் ஏற்பட்டிருந்த முறுகல் நிலை சற்றுத் தணிந்தது. இதே சமயம் இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வும், சமாதானமும் மக்கள் மத்தியில் ஏற்படத் தொடங்கியிருந்தது.

இதேவேளை சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென சர்வதேச சமூகத்திடம் இருந்தும் அரசிற்கு பெருமளவு உதவிகள் கிடைக்கப்பெற்றிருந்தன. அத்தோடு இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளவும், பரஸ்பர நம்பிக்கையை வளர்த்தெடுக்கவும் சுனாமி அனர்த்தம் பெரும் வாய்ப்பளிப்பதாகவே இருந்தது.

ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களுக்கான நிவாரணப் பணிகளில் பாரபட்சம் காட்டப்பட்டது. பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு அரச நிவாரணம் என்பது மிகச் சொற்பமானதாகவே இருந்தது. உதவி வழங்கும் நாடுகள் நேரடியாக வழங்க முன்வந்தபோதும் அரசாங்கம் அதனை அனுமதிக்கவில்லை.

அதாவது மக்கள் மனத்தில் புரிந்துணர்வு, பரஸ்பர நம்பிக்கை என்பவற்றைக் கட்டியெழுப்பக்கூடிய சந்தர்ப்பத்திலும், அரசாங்கம் தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்றியதாக இல்லை. தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய பங்கைக் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கவில்லை.

குறிப்பாக நிவாரணப் பணிகளுக்கானதொரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குதல் என்ற ரீதியிலும் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டை எடுத்ததாக இல்லை.அதுமட்டுமல்லாது சுனாமியின் தாக்குதல் நிகழ்ந்து இரண்டுமாத காலம் முடிவடைவதற்குள்ளேயே அரசாங்கம் தனது முன்னைய அணுகு முறைக்குத் திரும்பியிருக்கிறது.

அதாவது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான மறைமுகப் போர் ஒன்றை ஏற்கனவே அரசாங்கம் தொடுத்திருந்தது. இதன் காரணமாக விடுதலைப்புலிகள் பல போராளிகளை இழக்க வேண்டியதாகி இருந்தது. இதேவேளை இச் சம்பவங்கள் குறித்து அரசாங்கம் பொறுப்பு வாய்ந்த ரீதியில் பதிலளித்ததாகவும் இல்லை. அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்ததாகவும் இல்லை. அத்தகைய நிலையே தற்பொழுதும் நீடிக்கிறது.

இந்த வகையில் அதாவது ஒரு புறத்தில் தமிழ்மக்களின் இன்னல்கள், துயரங்கள் என்பனவற்றைப் போக்க அரசாங்கம் பேச்சுவார்த்தை மூலம் இணக்கப்பாட்டிற்கு வராததொரு நிலையும், மறுபுறத்தில் விடுதலைப்புலிகள்மீது தொடுத்துள்ள மறைமுகப் போரும் நிலைமையை மோசமான கட்டத்திற்குள்இட்டு வருவதாயுள்ளது.

இந் நிலையில் விடுதலைப்புலிகள்இயக்கம் தமிழ் மக்களின் பாதுகாப்பு, உரிமைக்கான போராட்டம் என்பனவற்றின் எதிர் காலம் தொடர்பான தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாதவாறு உருவாகியுள்ளது என்றே கூறலாம். அதாவது அரசாங்கம் தொடர்ந்தும் தமது நிலைப்பாட்டை மாற்றாத நிலை உருவாகும் பட்சத்தில் விடுதலைப்புலிகள் இயக்கம் சில தீர்க்கமானதும், உறுதியானதுமான முடிவுகளை எடுக்க வேண்டியதாக இருக்கும். இது நிச்சயமாக சிறிலங்கா அரசிற்கு உவப்பானதாக இருக்கும் எனக் கொள்வதற்கில்லை.

# பொலிசாரின் செயற்பாடுகள் பாரதூரமான விளைவை ஏற்படுத்தும்

## தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(தென்மராட்சி)

கொடிகாமம் பிரதேச அரசியல்துறை அலுவலகத்திற்குள் ஆயுத முனையில் பொலிசார் மற்றும் புலனாய்வுத்துறையினர் அத்துமீறி உட்பிரவேசித்து அட்டூழியம் புரிந்துள்ளமையானது மன்னிக்க முடியாத பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய செயல் என தென்மராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தெரிவித்துள்ளார். அத்துடன் அலுவலகப் பணியாளர்கள் தடுத்தும், தள்ளிவிட்டு உட்சென்று கதவுகளைப் பலவந்தமாக தள்ளித் திறந்திருப்பதுடன், பூட்டிய கதவுகளை உடைக்க முற்பட்டுடிருப்பதும் எமக்கு விடப்பட்ட சவாலாகவும், அச்சுறுத்தலாகவும் கருதுகிறோம். இது குறித்து உடனடியாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு தெரியப்படுத்தி எமது வன்மையான கண்டனத்தையும், அதனால் வரக்கூடிய விளைவுகள் குறித்தும், இதனால் இப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பதற்றங்கள் குறித்தும் கண்காணிப்பு குழுவின் பிரதிநிதிகளுக்கு விளக்கியுள்ளோம், கடந்த சில நாட்களாக இப்பிரதேசத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தி திட்டமிட்ட வகையில் சிறிலங்காப் புலனாய்வுத்துறையின் உதவியுடனும், பொலிசாரின் துணையுடனும், தூண்டப்பட்டுவரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்தும், அதன் பின்னணி குறித்தும், மிகவும் ஆதாரபூர்வமாய் விளக்கியுள்ளோம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் எமது நியாயங்களைப் புரிந்துள்ளதுடன் உடனடியாக சம்பந்தப்பட்ட தரப்புக்களோடு கதைத்து எமக்குப் பதில் அளிப்பதாகத் தெரிவித்துள்ளனர் என்றார். (28)

# திருமலையில் 12 ஜெனரேட்டர்கள் திருட்டுத் தொடர்பில் கைதானோருக்கு தொடர்ந்து விளக்கமறியல்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் காணி அலுவலக களஞ்சியத்திலிருந்து பன்னிரண்டு ஜெனரேட்டர்கள் காணாமற்போன சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள உதவிக் காணி ஆணையாளர் மற்றும் இரண்டு சிற்றூழியர்கள்ளையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும்படி திருகோணமலை நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா நேற்று உத்தரவிட்டார்.

இதேவேளை,உதவிக்காணி ஆணையாளரும் மூன்றாவது சந்தேக நபருமான நிமால் திசாநாயக்க சமர்ப்பித்த பிணை மனுவை நிராகரித்த நீதவான் கணேசராஜா, "கடல்கோளினால் மிகவும் பாதிக்கப்பட்டு இருட்டில் வாழ்கின்ற மக்களுக்கு ஒளியூட்ட வந்த ஜெனரேட்டர்களைக் களவாடியது சம்பந்தமாகக் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டினை மன்று பாரதூரமானதாகக் கருதுகின்றது. என்று குறிப்பிட்டார். பிணைமனுவை நிராகரித்த நீதவான் கணேசராஜா ஐந்து பக்கத் தீர்ப்பை வழங்கினார். உதவிக்காணி ஆணை யாளர் சார்பில் சட்டத்தரணிகள் ரூபசிங்க, ஜே.எம்.லாஹிர் ஆகியோர் ஆ[illegible] காலி அலுவலகத்தைச் சேர்ந்த சிற்றூழியர்களான உபாலி ரட்ணசிறி ,உப்புல் குமார கொடிப்புலி ஆகியோரையும், மூன்று சந்தேக நபரான உதவிக் காணி ஆணை யாளர் நிமால் திசாநாயக்காவையும் மார்ச் 18 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதவான் கணேசராஜா உத்தரவிட்டார். (25)

# அரசியல் மூலம் மக்கள் ஏமாற்றும் யுகத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்

## -எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

அரசியல் மூலம் மக்களை ஏமாற்றும் யுகத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாடு எதிர்நோக்கியுள்ள நிலையிலிருந்து அதனை மீட்டு எடுப்பதற்கான 15 வருடங்களுக்கு ஒரே கொள்கையுடன் செயற்பட்டு நாட்டை முன்னெடுத்துச்செல்ல வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தற்போதைய அரசாங்கம் மக்களின் பிரச்சினைகள் குறித்துக் கவனம் செலுத்தவில்லையெனக் குற்றம் சாட்டும் எதிர்க்கட்சித் தலைவர், இவற்றைத் தீர்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியினாலேயே முடியு மென்றும் கூறினார். இதற்கென தேசிய இணக்கப்பாடு ஒன்று பெறும் வகையில் இந்தக்கொள்கையைத் தமது கட்சி முன்வைத்துள்ளதாகவும் கூறினார். இந்த வேலைத் திட்டங்களுக்கு கட்சி பேதங்களை மறந்து சகலரும் இணைந்து கொள்ள முடியு மென்றும் அவர் தெரிவித்தார். பொலநறுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். நாட்டை முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் மூன்று மாதத்திற்குள் மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்து ஓராண்டு பூர்த்தியாகியும் அதனை அரசாங்கம் நிறைவேற்றவில்லையெனவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# மக்களைத் தவிர வேறு எவரையும் பாதுகாக்கும் தேவை எமக்கில்லை

## -ஜே.வி.பி. பிரதி அமைச்சர் விமல் ரட்ணாயக்கா

தேர்தலுக்குமுன் மக்களுக்குக் கொடுத்த எழுத்து மூலமான வாக்குறுதி ஒன்று இருப்பதாகவும், தாம் மக்களைப் பாதுகாக்க மட்டுமே கடப்பாடுடையவர்கள் என்றும், வேறு எவரையும் பாதுகாக்கும் தேவை தமக்கு இல்லை எனவும் மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பிரதி விவசாய அமைச்சர் விமல் ரட்ணாயக்க தாம் மக்களுக்கு எழுத்து மூலமாகக் கொடுத்த வாக்குறுதியுள்ளது. தாம் அதன் படியே செயற்பட வேண்டும். தாம் மக்களை மட்டுமே பாது காக்க வேண்டும். மற்ற எவரையும பாதுகாக்கப் போவதில்லை. தமக்கென்று ஒரு பொறுப்பு இருக்கின்றது. அதனால்தான் அரசாங்கத்திற்குள் இருந்து கொண்டே வெளி மேடைகளில் அதனை விமர்சிக்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளார். (32)

# மாணிக்கக் கற்களை கடத்த முயன்றவர் கைது

இரண்டரைக்கோடி பெறுமதியான மாணிக்கக் கற்களை நாட்டிற்குள் கடத்த முயன்ற ஒருவரை கட்டுநாயக்க சுங்கப் பிரிவினர் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர். தாய்லாந்திலிருந்து இந்த மாணிக்கக் கற்கள் கடத்தி வரப்பட்டதாக விசாரணைகளில் இருந்து தெரியவருகின்றது. கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் பயணப்பையில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்த மாணிக்கக் கற்கள் பெறுமதிவாய்ந்தவை என உதவி சுங்கப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்ட நபர் மொரட்டுவப் பகுதியினைச் சேர்ந்தவர் எனவும் குறிப்பிட்டார்.

# எஸ்.பி. திசாநாயக்கவுடன் இணக்கத்திற்கு வர சனாதிபதி சந்திரிகா விருப்பம்

கொழும்பிலுள்ள வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவரும் ஐ.தே.கட்சியின் எஸ்.பி. திசாநாயக்கவுக்கும், சனாதிபதி சந்திரிகாவுக்குமிடையில் கருத்துப் பரிமாற்றம் ஆரம்பிக்கப்பட விருப்பதாகவோ அல்லது அதற்கான ஆயத்தங்கள் நடை பெறுவதாகவோ ஊடகங்களுக்கு செய்திகள் குவிந்த வண்ணம் இருப்பதாக ராவய பத்திரிகையின் பிரதான தலைப்புச் செய்தி தெரிவித்துள்ளது. எஸ்.பி யை கைக்குள் போட்டு அவருடாக சில எம்.பிக்களை தமது கட்சியில் இணைக்கவும், அது வெற்றியளிக்கும் பட்சத்தில் எஸ்.பி க்கு பொதுமன்னிப்பளித்து மேலதிகமாக அரசாங்கத்துக்குள் உயர் பதவி ஒன்றை வழங்கவும், சந்திரிகா விருப்பியிருப்பதாகத் தெரியவருகிறது. இதன்மூலம் ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே. கட்சியை வீழ்த்தவும் ஜே.வி.பி. மற்றும் ராஜபக்ஷவின் எதிர்ப்புக்களைச் சமாளிக்க அல்லது முறியடிக்க முடியும் என்பது. சந்திரிகாவின் தந்திரமாக இருப்பதாகவும் தெரியவருகிறது. எனினும் எஸ்.பி. திசாநாயக்கவின் நிலைப்பாடு பற்றி இதுவரை அறிய வரவில்லை.

# புலிகளும், அரசாங்கமும் இணைந்து பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டும்

## - ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் இணைந்து பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. நேற்று சனாதிபதியை சந்தித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளி விவகார ஆணையாளர் பெரரோ வோல்டனர் இந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ளார்.சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வது தொடர்பில் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணைந்து செயற்படும் நிலை உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.சனாதிபதி மாளிகையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.இதேவேளை இன்றைய தினம் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் பெரரோ வோல்டனர் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளைச் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# டக்ளசின் மோசடிகளையும் சீர்கேடுகளையும் அம்பலமாக்குகிறார் சகா விக்கினேஸ்வரன்!

ஈபி.டி.பி. செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவின் சகா விக்னேஸ்வரன் டக்ளஸ் தேவானந்தா புரிந்த நிதிமோசடிகள் தொடர்பாகவும் பலபெண்களுடன் கொண்டிருந்து முறைகேடான பாலியல் ரீதியான தொடர்புகள் குறித்தும் பல தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இருவருக்குமிடையேயான முரண்பாடுகள் வலுவடைந்ததையடுத்து அவர் இத்தகவல் வெளியிட்டுள்ளார்.

சுனாமி நிதியாக இந்திய அரசாங்கம் கொடுத்த 20 மில்லியன் ரூபா நிதி எங்கு சென்றது. என்ற கேள்வியெழுப்பியுள்ள விக்னேஸ்வரன் இப்பணத்தை டக்ளஸ் தேவானந்தா சகோதரனுடன் இணைந்து சுருட்டிக்கொண்டதாகத் தெரிவித்தார்.

அத்துடன் பலபெண்களுடன் டக்ளஸ் தேவானந்தா கொண்டுள்ள முறைகேடான பாலியல் தொடர்பு குறித்தும், அவர்களுக்கு வீடு, வாகனங்கள் என்பனவற்றை வாக்கிக்கொடுத்ததாகவும் தெரிவித்தார்.

பதிலுக்கு தனது சகாவான விக்னேஸ்வரன் நிதிமோசடி மற்றும பெண்களுடன் முறைகேடான தொடர்புகளை வைத்திருந்ததாக டக்ளஸ் தேவானந்தா குற்றம் சாட்டியுள்ளார்.

## உலகவங்கி...

படுத்தும் எதனையும் அனுமதிக்கும் ஒரு அரசியல் கட்சியல்ல எமது தாய்நாட்டிற்கு பங்கம் விளைவிக்கும், சதிசெய்யும் முகவர்களையும் எந்தவொரு கட்சியையும் தோற்கடிக்கும் கட்சியாகவே இந் நாட்டின் மக்கள் எமக்குப் பலத்தைத் தந்துள்ளனர். இதனடிப் படையில் நாங்கள் பீற்றர் ஹரோல்ட்டின் இக்கூற்றை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவர் உலக வங்கியின் பிரதிநிதியாக இக்கூற் றைத் தெரிவித்துள்ளார். இது சிறிலங்காவின் இறைமைக்கு அழிவை ஏற்படுத்துவதோடு பெரும் சவால்களை இந்த நாட்டின் அதிகாரிகளிற்கும் ஏற்படுத்துகிறது.

இக்கூற்றை உடனடியாக மீளப்பெறவேண்டும் அல்லது உலக வங்கி உடனடியாகத் தமது பிரதிநிதியை மீளப் பெற வேண்டுமென அவ்வறிக்கையில் ஜே.வி.பி.கேட்டுள்ளது.

ஆங்கில வாரஇதழொன்றிற்கு நேர்காணலின்போது புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் உத்தியோகப்பற்றற்ற அரசு இருக்கிறது எனத் தெரிவித்திருந்தார். என அந் நேர்காணலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எந்த நாட்டிலுள்ள உலக வங்கிப்பிரதிநிதியும் உள்நாட்டு அரசியல் விவகாரம் தொடர்பாக எந்த அறிக்கையையும் வெளியிடமுடியாது. அவரிற்கு நாட்டின் இறைமைக்கும் சவால் ஏற்படுத்தக்கூடிய , பங்கம் விளைவிக்கக்கூடிய செயற்பாடுகளிற்கு அல்லது கருத்துக்களைத் தெரிவிக்கவும் உரிமையளிக்கப்படவில்லை என ஜே.வி.பி. யின் மத்தியகுழு அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

## அனைத்துலகப்...

நிகழ்ச்சிகளும், நடனங்கள் எனப் பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என பிரதேச மாதர்சங்கத்தினர் அறியத்தருகின்றனர்.

இன்று மதியம் 2.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் 2 ஆம் லெப்.மாலதி அவர்களின் திருவுருவப் படத்திற்கு ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து ஆரம்பமாகும். இந் நிகழ்வில் "சட்டத்தின் முன் சமத்துவத்துக்கான உரிமைகள்" என்னும் சாரத்தில் கருத்துரையும் இடம் பெறவுள்ளது.

வடமராட்சி மகளிர் கோட்ட அரசியல்துறையினர் முன்னெடுக்கும் இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி அவர்களும், யு.என்.எச்.சி.ஆர் அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளும் கலந்துகொள்கின்றனர்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெறவுள்ளன. இதனை மன்னார் கத்தோலிக்க பெண்கள் ஒன்றியம் ஒழுங்கு செய்துள்ளது.

இதில் கலந்துகொள்வோர் கமநல சேவை உதவிப் பணிப்பாளர் திருமதி. நந்தினி குரூஸ், மாகாண பிரதி சுகாதா, பணிப்பாளர் டாக்டர் நடனியூட், புனித சவேரியர் பெண்கள் கல்லூரி முதல்வர் அருட்சகோதரி ஜெயசீலி ஆகியோர் கலந்துகொள்வர். இதில் கருத்துரைகள்,சிறப்புரைகள் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறுகின்றன. மேலும் அண்மையில் பேரலையில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான மௌனப் பிரார்த்தனையும் இந்நிகழ்வில் இடம்பெறும். (18,24,ச,கா)

## நான் வழங்கிய...

அந்த அறிக்கையில் அவர் தெரிவிக்கையில், வட-கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களென அங்கீகரிக்கப்பட்ட பிரதேசங்கள் இருக்கின்றன. எனவும் அங்கு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள புலிகளின் ஆலோசனை -அனுசரணை தேவை எனக் கூறியிருந்ததாகவும், உத்தியோகப்பற்றற்ற தனிநாடு இருப்பதாகத்தான் கூறவில்லை எனவும் அவர் நேற்று விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## தாயகம்...

ளையடித்துச் சென்றதாக மன்னார் பொலிசில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

இந்த ஈழத்தமிழ் அகதிகள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்தியப் படகொன்றில் தாயகம் திரும்பினர்.

இவர்கள் மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது இவர்களைச் சொந்த இடங்களிற்கு அனுப்புமாறு உத்தரவிட்ட மன்னார் மாவட்ட நீதிபதி படகோட்டிகளால் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டதாகக் முறைப்பாடு செய்த பெண்ணை மன்னார் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்குமாறும் உத்தரவிட்ட துடன் இது தொடர்பான விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளார்.

## படகுக்கட்டுமான....

விருத்தி நிறுவனத்தினாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்படகுக் கட்டுமான பயிற்சிக்கூடமானது நேற்றுக் காலை 11 மணியளவில் திறந்து வைக்கப் பட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி மற்றும் தொழிற்கல்வி மற்றும் அவர்களது எதிர்கால நலனையும் கருத்திற்கொண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பல்வேறுபட்ட கல்வித்திட்டங்களில் மற்றுமொரு அங்கமாக அமைக்கப்பட்டுள்ள இத்தொழிற்பயிற்சிக் கூடமானது கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது.

தொழிற்கல்விக் கூடத்தின் பெயர்ப்பலகையினை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் டென்மார்க் கிளைப் பணிப்பாளர் ஆனந்தன் அவர்கள் திரை நீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து கல்விக் கூடத்தின் கட்டடத்தினை தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகன் அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பயிற்சியினை எம்.எம்.எஸ். நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் குபேரன் அவர்கள் பயிற்சியினை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் தமிழீழ கடற்படையைச் சேர்ந்த விநாயகம் அவர்களும் சிறப்புரையினை நிகழ்த்த தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகஉதவிநிறைவேற்றுப் பணிப்பாளர் றீகன்,தமிழர் புனர்வாழ்வுக்கழக டென்மார்க் கிளைப் பணிப்பாளர் ஆனந்தன், தொழில்நுட்ப ஆசிரியர் வேலாயுதம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான கல்வி தொழிற்கல்வி அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் ப.யோகன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நன்றியுரையினை றீடோ நிறுவனப்பணிப்பாளர் அன்ரன் செல்வராசா அவர்கள் வழங்கினர். (ச,தீ)

# நாட்டுப்பற்றாளர் சிவராசாவின் புகழுடல் தீயுடன் சங்கமம்

நேற்று முன்தினம் திகதி சுகவீனம் காரணமாகச் சாவடைந்த நாட்டுப்பற்றாளர் கணபதிப்பிள்ளை சிவராசா அவர்களுடைய புகழுடல் நேற்றைய தினம் தீயுடன் சங்கமமானது.

நேற்றுக்காலை சிவராசாவின் புகழுடல் நிதர்சனம் நிறுவனத்தில் வணக்கத்திற்காக வைக்கப்பட்ட பின், குமரபுரம் பரந்தனிலுள்ள அவரது இல்லத்தில் மக்கள் வணக்கத்திற்காக வைக்கப்பட்டது.

பின்னர் பிற்பகல் மூன்று மணிக்கு பரந்தன் இந்து வித்தியாலயத்தில் இறுதிவணக்க நிகழ்விற்காக வைக்கப்பட்டு, அங்கு வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

பரந்தன் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் ஈகைவீரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஈகச்சுடரினை கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சிவநாத் ஏற்றிவைத்தார். தொடர்ந்து நாட்டுப்பற்றாளரின் புகழுடலுக்கு பிள்ளைகள் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தனர். தொடர்ந்து பாடசாலை அதிபர் பத்மநாதன் ஆசிரியர் கருணாகரன், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம், புலிகளின் குரல் நிர்வாக இணைப்பாளர் ராஜேஸ்வரன், நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன் வீரவணக்கவுரை நிகழ்த்தினர். அடுத்து கவிதாஞ்சலி உரையை கவிஞர் நாவண்ணன் நிகழ்த்தினார். நாட்டுப்பற்றாளரின் வித்துடலுக்கு ஆசிரியர்கள்,மாணவர்கள், பொதுமக்கள்,போராளிகள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர். நாட்டுப்பற்றாளரின் புகழுடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, பரந்தன் மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது. நாட்டுப்பற்றாளர் சிவராசா அவர்கள் புலிகளின்குரல் வானொலியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், மற்றும் நிதர்சனம் தயாரித்த குறும்படங்களை இயக்கிவந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (14)

# தேச விரோதக் குழு உறுப்பினர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

மட்டக்களப்பு வாழைச்சேனையில் நேற்று இரவு தேசவிரோதக் குழு உறுப்பினரொருவர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளார்.

இவர் பொலநறுவை குடாப் பொக்கணையைச் சேர்ந்த 20 வயதுடைய சிவராசா ரவீந்திரன் எனத் தெரிவிக்கப்படுகின்றது. வெலிக்கந்தவிலிருந்து வாழைச்சேனைக்கு பேருந்தில் வந்திறங்கிய இவர் இ.போ.ச. டிப்போவிற்கு அருகில் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டே சுடப்பட்டுள்ளார். தலையிலும், கையிலும் காயமடைந்து வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் பொலிஸ் பாதுகாப்புடன் தற்போது பொலநறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்.

# இராணுவ உளவாளி ஒருவர் ஆரையம்பதியில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பின் தெற்கே ஏழு கிலோமீற்றரில் உள்ள ஆரையம்பதியில் வைத்து இராணுவ உளவாளி ஒருவர் இனந்தெரியாத நபர்ஒருவரினால் நேற்று முன்தினமிரவு 11.00 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட் டுள்ளார்.

வரதரணி முன்னாள் உறுப்பினரான இவர் ஆரையம்பதி விசேட அதிரடிப்படையினர் முகாமில் வசித்துவந்தார். இவர் நான்கு மாதங்களிற்கு முன் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தின்போது காயமடைந்தவர் எனக் காத்தான் குடிப் பொலிசார் தெரிவிக்கின்றனர். இவ்விராணுவ உளவாளி பத்மநாதன் என அடையாளம் காணப்பட்டுள்ளார் என காத்தான் குடிப்பெலிஸ் பொறுப்பதிகாரி ஜெகெரத் தெரிவித்தார். துப்பாக்கிதாரி அவரை அவரின் வீட்டிலிருந்து அழைத்துச்சென்று மாவிலிங்க முனையில் வைத்துச் சுட்டுள்ளார். கொலை நடைபெற்ற இடத்தில் மூன்று வெற்று ரவைகள் காணப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட அனைத்து அழககங்களினதும் உரிமையாளர், தொழிலாளர்களுடனான கலந்துரையாடல் நாளை காலை 10.00 மணியளவில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட ஒன்றிய நிர்வாகத் தெரிவு மற்றும் சங்க நடைமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாட இருப்பதால் சகல அழககங்களினதும் உரிமையாளர் மற்றும் தொழிலாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் பொறுப்பாளர் அ.சுதாஸ் கேட்டுள்ளார்.

## வெள்ளி விழா

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலய துர்க்காதேவி பெண்கள் தொண்டர்சபையின் 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

ஆலய பெண்கள் தொண்டர் சபைத் தலைவி கலாநிதி சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் துர்க்கா மணி மண்டபத்தில் நிகழ்வுகள் இடம் பெற்றன. (41)

## ஆளுநரின் யாழ்.விஜயம் பிற்போடப்பட்டது

"சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களை மீளாய்வு செய்வதற்காக நாளை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவிருந்த வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநரின் விஜயம் பிற்போடப்பட்டுள்ளது. அவரது வருகைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

## கொடிகாமம்...

அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், மற்றும் கொடிகாமம் பிரதேச பொறுப்பாளர் இரத்தினம் ஆகியோர்இது குறித்து உடனடியாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு தெரியப்படுத்த, சம்பவ இடத்திற்கு வருகைதந்த கண்காணிப்புக்குழு சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டதுடன் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது. இச் சம்பவத்தால் கொடிகாமப் பிரதேசத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (28)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது